CONNEMARA PUBLIC LIBRARY

ஆரம்பக்கல்வி

ஆரம்பாசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை மானேஜர்கள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்

ஆசிரியர் : பி. வீரராகவன்

வருட சந்தா ரூ. 3.] [தனிப் பிரதி 4 அணு.

மலர் 15 | டிசம்பர் 1954 | இதழ் 12

மணமகன் இல்லாத திருமணம்!

மணமகன் இல்லாமல் ஒரு திருமணமா?

அப்படியும் ஒன்று நடந்திருக்கிறதா?

அப்படி ஒரு திருமணம் நடக்கத்தான் இயலுமா?

செச்சே! இது வெறும் கற்பனை!

ஆசிரியரின் பேனாவில் முளைத்த அர்த்தமற்ற சாடு!

நம்பமுடியாத நிகழ்ச்சி — ஏற்க முடியாத கருத்து!!

வாசகர்கள் இப்படியெல்லாம் பேசக்கூடும் — தலைப்பைக் கண்டதும்!

ஆனால் மணமகன் இல்லாத ஓர் திருமணம் நடைபெற்றுத்தான் இருக்கிறது.

அதிசயம்தான் ஆனால் உண்மை.

நம்ப முடியாததுதான், ஆனால் நடைபெற்றிருக்கிறது.

நடந்த நகர் எங்கே என்கிறீர்களா? சென்னை!

திருமணத் தேதி வேண்டுமா? 24—11—54.

திருமணத்தை நடத்தி வைத்தவர்களின் பெயர் தேவையா?

சென்னை அரசாங்கம்!

ஆமாம் நண்பர்களே ஆமாம். சென்னை அரசாங்கத்தினர்தான், மணமகன் இல்லாத ஓர் திருமணத்தை, நாடறிய நகரறிய, கொட்டு முழக்கத்தோடும் மேளதாளத்தோடும், சென்ற நவம்பர் 24—ம் நாளன்று நடத்திமுடித்திருக்கின்றனர்.

ஆரம்பக் கல்வியின் வளர்ச்சிக்கு ஏற்ற எல்லாப் பிரச்சினைகளையும் அலசி ஆராய்ந்து ஒரு முடிவு கூறுவதற்காக அறிஞர் குழு ஒன்றை அமைத்திருக்கின்றனர் சென்னை அரசாங்கத்தினர்.

அனைவராலும் வெறுக்கப்பட்ட ஆச்சாரியாரின் கல்வித் திட்டம் கைவிடப்பட்ட நாள் முதலாகவே, ஆரம்பக் கல்வியைப் பற்றி ஆராய்வதற்காக ஒரு புதிய கமிட்டியை அமைக்கப் போகிறோம் என்று கல்வி அமைச்சர் கனம் சுப்ரமண்யனார் ஓயாமல் கூறிவந்திருக்கிறார்.

அந்தப் புதிய கமிட்டிதான் இப்போது அமைக்கப்பட்டிருக்கிறது.

கமிட்டியின் தலைவராகத் திருவாளர் டாக்டர் அழகப்ப செட்டியார் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

கல்வி அதிகாரி திரு சுந்தரவடிவேலு, கோயம்புத்தூர் இராம கிருஷ்ண வித்யாலயத்தைச் சேர்ந்த திரு கே. அருணசலம், ஈரோடு கலைமகள் கல்வி நிலையத்தைச் சேர்ந்த திரு. எஸ். மீனட்சிசுந்தர முதலியார், திருமங்கலம் பி. கே. எம். உயர்நிலைப்பள்ளியின் தலைமையாசிரியர் திரு. எம். அருணசலம், புரசைப்பாக்கம் எம். சி. டி. முத்தையா செட்டியார் உயர்நிலைப் பள்ளியின் தலைமையாசிரியர் திரு. எஸ். கோபாலகிருஷ்ண அய்யர் ஆகியோர், கமிட்டியின் ஏனைய உறுப்பினர்கள்.

இந்தக் கமிட்டியை அமைத்திருக்கிற காரியத்தைத்தான் மணமகன் இல்லாத திருமணம் என்று நாம் குறிப்பிடுகிறோம். ஏன்?

கமிட்டி அமைக்கப்பட்டிருப்பதோ, ஆரம்பக் கல்வியைப் பற்றிய பல்வேறு பிரச்சினைகளையும் அலசி ஆராய.

ஆகவே, கமிட்டியிலே, பாதி உறுப்பினர்களாவது, ஆரம்பக் கல்வியோடு நீண்டநாள் தொடர்புடையவர்களாக இருக்க வேண்டியது இன்றியமையாதது.

நீண்ட காலமாக ஆரம்ப ஆசிரியத் தொழில் புரிந்துவருபவர்கள்,

ஆரம்பப் பள்ளிகளை வைத்து நடத்தி அதன் மூலமாக அந்தத் துறையிலே பழுத்த அநுபவம் படைத்து விளங்கும் ஆசிரிய மானேஜர்கள்,

ஆரம்ப ஆசிரியர்கள், ஆரம்பப் பள்ளி மானேஜர்கள் ஆகியவர்களுடைய சங்கங்களின் பிரதிநிதிகள்,

எண்ணற்ற பல ஆரம்பப் பள்ளிகளை நடத்திவரும் கிறித்தவ மிஷனரி மானேஜ்மெண்டுகளின் பிரதிநிதிகள்,

ஆரம்ப ஆசிரியர்களின் முன்னேற்றத்திற்காகவும், ஆரம்பக் கல்வியின் வளர்ச்சிக்காகவும் நடைபெற்றுவரும் பத்திரிகைகளின் பிரதிநிதிகள்,

ஆகிய இப்படிப்பட்டவர்களெல்லாம்தான், ஆரம்பக் கல்வியைப் பற்றிய ஆய்வுக் குழுவிலே முதலிடம் பெறவேண்டிய உரிமை படைத்தவர்கள்.

இப்படிப்பட்டவர்களையெல்லாம் உறுப்பினர்களாக நியமித்துத்தான் இந்தக் கமிட்டி அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் இப்போது, கமிட்டி, இந்த வகையாகவா அமைக்கப்பட்டிருக்கிறது ?

நிச்சயமாக இல்லை.

ஆரம்பக் கல்வியின் வளர்ச்சிக்காக அமைக்கப்பட்டிருக்கிற இந்தக் கமிட்டியில் ஆரம்பக் கல்வியுடன் நேரடித் தொடர்புடையவர்கள் ஒருவர்கூட இல்லை !

திருமணம் நடைபெறுகிறது — அதிலே மணமகன் இல்லை!

எத்தனை வேடிக்கை ! எவ்வளவு விபரீதம் !!

டாக்டர் அழகப்ப செட்டியார், கண்ணியமும் கடமை உணர்ச்சியும் நிறைந்த ஓர் கனவான் — மறுப்பாரில்லை ! பல்வேறு வகைத் தொழிற்சாலைகளைப் பண்பும் பயனும் மிக்க வகையில் நடத்தி வரு

பவர் — இல்லை என்பார் கிடையாது! தன்னுடைய சொந்தப் பணத்தில் கல்லூரிகள் பலவற்றைத் தொடங்கி சிறப்புற நடத்தி வரும் செல்வச் சீமான் — அதனையும் இல்லை என்று இயம்பிட இயலாது. பொது நல உணர்ச்சி மிகுந்தவர், கொடைத்திறம் வாய்ந்த கோமான், பலராலும் புகழ்ப்படும் பெற்றிமை படைத்தவர் — அத்தனையும் உண்மைதான். ஆனால், அந்தத் தென்னாட்டு வள்ளலுக்கும் ஆரம்பக் கல்விக்கும் என்ன தொடர்பு? அதைத்தான் நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை. தொழிற்சாலைகளின் வளர்ச்சிக்காக ஓர் நிபுணர் குழு நியமிக்கப்பட்டால் அதிலே டாக்டர் அழகப்ப செட்டியாருக்கு நிச்சயம் இடம் இருந்தாக வேண்டும். ஏனெனில் அவர் தொழில் துறை வல்லுநர். கல்லூரிக் கல்வியைப் பற்றிய கருத்தறிவிப்பதற்காக ஒரு குழு உண்டாகுமானால் அதிலேயும் அவர் இடம் பெறவேண்டும். ஏனெனில் பல கல்லூரிகளை நடத்திவரும் பொறுப்பும் வசதியும் ஒருங்கே உடையவர் அவர். ஆனால் ஆரம்பக் கல்வியின் எதிர்காலத்தைப் பற்றிய ஓர் அறிஞர் குழுவிலே, அந்தக் கல்வியைப் பற்றிய அநுபவமோ தொடர்போ பெற்றிராத டாக்டர் அழகப்பாவை ஏன் நாம் வற்புறுத்தி அழைத்து வந்து இடம் பெறும்படி செய்யவேண்டும்?

கமிட்டியின் ஏனைய உறுப்பினர்கள் ஐவர். அவர்களிலே ஒருவர் கல்வி அதிகாரி. அவர், அறிவும் ஆற்றலும் நிறைந்தவர். ஆரம்ப ஆசிரியர்களிடம் அன்பும் பரிவும் மிகுந்தவர். கல்வித் துறையில் நீண்ட கால அநுபவமும் ஆராய்ச்சியும் படைத்தவர். ஆனால் அவர் இப்போது இருப்பதோ கல்வி அதிகாரி என்கிற இடம். அந்த இடத்தில் இருப்பவர்கள், தனிப்பட்ட முறையில் எத்துணைதான் ஆரம்ப ஆசிரியர்களிடமும், ஆரம்பக் கல்வியிடமும் பற்றுடையவர்களாக இருந்தாலும், அந்த இடத்தில் இருக்கும் வரையில், அரசாங்கத்தின் சார்பில்தான் பேசமுடியும். அவர் இந்தக் கமிட்டியில் இடம் பெறுவதே, கிட்டத்தட்ட அரசாங்கத்தின் பிரதிநிதி என்கிற முறையில்தான். எனவே அவரை, ஆரம்ப ஆசிரியர்களின் பிரதிநிதியாகக் கொள்வது பொருத்தமில்லாத காரியமாகும்.

மிச்சமுள்ள உறுப்பினர்களில், திருவாளர்கள் எம். அருணாசலம், எஸ். கோபலகிருஷ்ண அய்யர் ஆகிய இருவரும் இரண்டு உயர்நிலைப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களாக இருப்பவர்கள். அதுபோலவே, மற்றோர் உறுப்பினராகிய திரு எஸ். மீனாட்சி சுந்தரனார் ஈரோட்டிலுள்ள ஓர் உயர்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியராக நெடுங்காலம் பணி புரிந்தவர். இவ்வாறாக, இம் மூவரும், உயர்நிலைப் பள்ளிகளின் பிரதிநிதிகளாக இருக்கிறார்களே தவிர, ஆரம்பப் பள்ளிகளின் பிரதிநிதிகளாக இருக்க வழியில்லை.

எஞ்சியுள்ள உறுப்பினர், திருவாளர் கே. அருணசலம். அவர் இராமகிருஷ்ண வித்யாலயத்தைச் சேர்ந்தவர். எனவே அவரை அந்த வித்யாலயத்தின் பிரதிநிதியாக ஏற்றுக்கொள்ளலாம்.

ஆம்! கமிட்டி உறுப்பினர்களின் தகுதி திறமை பண்பு இயல்பு களை அலசிப் பார்க்கும்போது, டாக்டர் அழகப்ப செட்டியார்—கல்லூரிக் கல்வியின் பிரதிநிதியாகிவிடுகிறார்! எஸ். கோபாலகிருஷ்ண ஞர், எம். அருணசலனர், எஸ். மீனாட்சி சுந்தரனர் ஆகிய மூவரும் உயர்நிலைக் கல்வியின் பிரதிநிதிகளாகிவிடுகின்றனர்! கல்வி அதிகாரி அவர்கள் அரசாங்கத்திற்கும், திரு கே. அருணசலனர் இராம கிருஷ்ண அமைப்புக்கும் பிரதிநிதிகளாகின்றனர்! ஆனல் ஆரம்பக் கல்வியின் பிரதிநிதியாக யார் இருக்கிறார்கள்? ஆரம்ப ஆசிரியர்களின் சார்பிலே பேச எவர் உள்ளனர்? ஆரம்பப் பள்ளி மானேஜ்மெண்டு களின் நிலைமையை எடுத்து விளக்கும் உரிமை உடையவர்கட்கு எங்கே இடம்?

கமிட்டி அமைந்திருப்பதோ, ஆரம்பக் கல்வியைப் பற்றி ஆராய.

ஆனல் கமிட்டியில் இடம் பெற்றிருப்பவர்களோ, ஆரம்பக் கல்வியுடன் நேர்முகத் தொடர்பு கொண்டவர்கள் தவிர மற்ற அத்தனைப் பேரும்!

முறையா? ஒழுங்கா?

சரியா இந்தப் போக்கு?

ஜனநாயகக் கோட்பாட்டின்படி நடந்து கொள்வதாகச் சொல் லும் ஓர் அமைச்சரவை செல்லவேண்டிய பாதை இது தானு?

ஆரம்ப ஆசிரியர்களையும் ஆரம்பப் பள்ளி மானேஜர்களையும் பொறுத்த ஒரு பிரச்சினையிலே அவர்களை அடியோடு ஒதுக்கிவிட்ட காரண மென்ன?

அவர்கள் ஏழைகள் என்பதாலா? அவர்களுடைய குரலிலே போதுமான அளவு கம்பீரமும் கண்டிப்பும் இல்லை என்கிற காரணமா? எங்கும் எதற்கும் போராட்டம் என்று ஏற்பட்டுவிட்ட இந்தக் காலத்தில்கூட, கிளர்ச்சிப் பாதையில் புகுந்திடாமல் அமைதிக் கீதம் பாடியபடி இருக்கிறார்களே அவர்கள், அந்தப் பொறுமை உணர்ச்சியின் விளைவா இந்த அலட்சியம்?

காரணம் எதுவாக இருந்தாலும் சரி. ஆரம்பக் கல்வியைப் பற்றிய ஒரு நிபுணர் கமிட்டியில், அந்தக் கல்வியோடு தொடர் புடைய அத்தனைப் பேரையும் ஒதுக்கியிருப்பது, மன்னிக்க முடியாத குற்றம் என்பதை நெஞ்சில் உரமும் நேர்மைத் திறமும் படைத்த எவரும் மறுத்துவிட முடியாது.

போனது போகட்டும். இப்போதும் காலம் கடந்துவிடவில்லை. ஆரம்ப ஆசிரியர்களின் சார்பில் மூவர், ஆரம்பப்பள்ளி நிர்வாகிகளின் சார்பில் மூவர், கிறித்தவமிஷன் மேனேஜ்மெண்டுகள் சார்பில் ஒருவர், ஆரம்பக் கல்வியின் வளர்ச்சிக்காக நடைபெற்றுவரும் பல்வேறு பத்திரிகைகளின் சார்பில் ஒருவர், ஆகமொத்தம் எட்டுப் பேரை, உடனடியாக, இந்தக் குழுவின் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளட்டும். ஏற்கெனவே கமிட்டியில், கல்லூரிக் கல்வி—உயர்நிலைக் கல்வி—அரசாங்கம்—இராமகிருஷ்ண வித்யாலயம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் இருக்கிறார்கள். அவர்களோடு, ஆரம்பக்கல்வியின் பிரதிநிதிகளும் சேர்க்கப்பட்டால், கமிட்டி, முழுமை உடையதாகும். அப்போதுதான், கமிட்டியின் அமைப்பால், உருவான பயன் ஏதாவது விளைய முடியும்.

அப்படியின்றி, ஆரம்ப ஆசிரியர்கள்—ஆசிரிய மானேஜர்களின் பிரதிநிதிகள் இல்லாமலே இந்த அறிஞர் குழு பணியாற்றுவதென்றால், அது, மணமகன் இல்லாமலே திருமணத்தை நடத்த முயலும் ஒரு கேலிக் கூத்தாகவே இருக்கமுடியும்.

கண்ணுடையார் எவரும் காணக்கூடிய உண்மை இது.

அவர்களுடைய கேள்வி -- நம்முடைய விடை!

ஆரம்பக் கல்வியை விரைவில் பரவச் செய்வதெப்படி என்பதைப் பற்றி ஆராய்வதற்காக டாக்டர் அழகப்ப செட்டியார் தலைமையில் ஒரு நிபுணர் குழு நியமிக்கப்பட்டிருக்கிறதல்லவா? அந்தக் கமிட்டியினர், என்னென்ன கேள்விகளைப் பற்றி ஆராய இருக்கிறார்கள் என்று நாளிதழ்களில் வெளி வந்திருக்கிறதோ அந்தக் கேள்விகளையும், அவற்றிற்கான நம்முடைய விடைகளையும் கீழே தந்திருக்கிறோம்.

1. அரசியல் திட்டம் நடைமுறைக்கு வந்த பத்தாண்டுக் காலத்திற்குள், 14 வயது வரை உள்ள எல்லாப் பிள்ளைகளுக்கும், கட்டாய ஆரம்ப இலவசக் கல்வியை அளித்தாக வேண்டுமென்று இந்திய அரசியல் திட்டத்தின் 45-வது விதி தெரிவிக்கிறதே, அந்த விதியில் கண்டுள்ள கருத்தை நடைமுறைக்குக் கொண்டு வருவதெப்படி?

அந்தக் கருத்தை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்குள்ள ஒரே வழி, ஆரம்பப் பள்ளிக்கூடம் இல்லாத கிராமமே இல்லை என்கிற நிலைமையை உண்டாக்குவதுதான். கிராமந்தோறும் ஒருபாட

சாலை என்கிற திட்டம் வகுக்கப்பட்டு அந்தத் திட்டத்தை அதி தீவிரமாக அமுல் நடத்த வேண்டும் அரசாங்கம். 250 பேருக்குக் குறையாத மக்கள் தொகை படைத்த ஒவ்வோர் ஊரிலேயும் ஒவ்வோர் பள்ளிக்கூடம் இருந்தே தீரவேண்டும். ஒவ்வோர் ஊரிலேயும் பள்ளிக்கூடத்திற்காகவென்று புதியதோர் கட்டிடம் கட்டித்தீர வேண்டுமென்கிற அவசியமில்லை. பெரும்பாலான கிராமங்களில் மிகப்பெரிய கோயில்கள் இருக்கின்றன. அந்தக் கோயில்களின் சில பகுதிகளை ஒழுங்குபடுத்தி, அவற்றைப் பள்ளிக்கூடப் பகுதிகளாகப் பயன்படுத்திக் கொள்வது நல்லது. பெரிய கோயில்களின் சிறிய சில பகுதிகளைப் பள்ளிக்கூட இடங்களாகப் பயன்படுத்திக் கொள்வதில் குற்றம் எதுவும் இருக்க முடியாது. கல்லார் நெஞ்சில் நில்லார் ஈசன் என்பது முதுமொழி. ஆண்டவனே கலை உருவாக அமைந்திருக்கின்றான் என்பது ஆன்றோர் கருத்து. நடமாடும் கோயில்களாகிய மக்களுக்குச் செய்யும் பணியே படமாடும் கோயில்களாகிய கடவுளர்க்குச் செய்யும் பணி என்பது திருமூலர் போன்ற பேரறிஞர்களின் பொன் மொழி. எனவே ஆண்டவனின் இல்லங்களில் ஒரு பகுதியை, அவர்தம் பிள்ளைகளாகிய குழந்தைகளின் கல்விக்காகப் பயன்படுத்துவதைக் குற்றம் என்று, ஆத்திகரும் சரி நாத்திகரும் சரி, கூற இயலாது.

நகரங்களைப் பொறுத்த வரையில், பல செல்வர்கள், பத்து வீடுகள் இருபது வீடுகள் என்று தத்தமக்குச் சொந்தமாக வைத்திருக்கின்றனர். நான்கு அல்லது ஐந்து வீடுகளுக்குமேல் வைத்திருப்பவர்கள், ஒரு வீட்டை, பள்ளிக்கூடம் நடத்துவதற்காக வாடகையின்றி விட்டுவைக்க வேண்டும் என்பதாக சட்டம் இயற்றலாம்.

நகராட்சி மன்றங்கள், மாவட்ட ஆட்சி மன்றங்கள் ஆகியவை, இப்போது, பல உயர்நிலைப்பள்ளிகளையும், சில இடங்களில், கல்லூரிகளையும்கூட நடத்தி வருகின்றன. இந்த மன்றங்களின் இத்தகு தவறான போக்கால், ஆரம்பக் கல்வியின் வளர்ச்சிக்காகச் செலவிடப்படவேண்டிய பெருந்தொகை, வேறு துறைகளில் திருப்பிவிடப்படுகிறது. இதன் விளைவாக, போதுமான ஆரம்பப் பள்ளிகளை இந்த மன்றங்களால் நடத்தமுடியாமல் போகிறது. தத்தமது எல்லைக்குள் இருக்கின்ற 14 வயதுக்குட்பட்ட எல்லாச் சிறுவர் சிறுமியரும் பள்ளிக்கூடம் போகின்றார்கள் என்கிற நிலை ஏற்படுகிற வரையில், எந்த நகராட்சி மன்றமும் மாவட்ட ஆட்சி மன்றமும், உயர்நிலைக் கல்விக்கோ கல்லூரிக் கல்விக்கோ பணம் செலவழிக்கக் கூடாது என்பதாக அரசாங்கம் சட்டம் இயற்றவேண்டும்.

சென்னை மாநிலத்திலிருந்து மத்திய அரசாங்கத்தால் வசூலிக்கப் படும் வருமான வரியில், இப்போது பொதுவாகத் தரப்படுவதுபோக மேற்கொண்டு ஒரு குறிப்பிட்ட பகுதியை, ஆரம்பக் கல்வியின் வளர்ச்சிக்காகவென்று, அந்த அரசாங்கத்தார், சென்னை அரசாங்கத்திற்குத் திருப்பித் தரவேண்டும்.

கல்லூரிகளில் பயின்று பி. ஏ. முதலிய பட்டம் பெறுபவர்கள் அந்தப் பட்டம் பெறுவதற்கு முன்னால், குறைந்தது ஓராண்டுக் காலம், குறைந்த அளவு ஊதியத்தில், ஆரம்ப ஆசிரியர்களாகப் பணி புரியவேண்டும் என்று அரசாங்கம் வற்புறுத்த வேண்டும்.

வெளிநாடுகளில் உள்ள நம் நாட்டுத் தூதுவர் நிலையங்களிலேயும், மத்திய அரசாங்க அதிகாரிகள் வெளிநாடுகளில் அரசாங்கத்திற்காகப் பண்டங்கள் வாங்கும் முறையிலேயும், இராணுவத் துறையிலேயும், இப்போது செலவாகி வரும் பணத்தில் ஒரு பகுதியை, சிக்கனச் செலவின் மூலமாக மிச்சப்படுத்தி, அதனை ஆரம்பக் கல்வியின் வளர்ச்சிக்காக ஒதுக்கவேண்டும்.

பணம் மிகுந்தவர்களும், எளிதில் தரக்கூடியவர்களுமாகப் பார்த்து, சில வரிகளை விதித்து, அவற்றின் மூலம் கிடைக்கும் தொகை முழுவதையும் ஆரம்பக் கல்வியின் வளர்ச்சிக்கென்றே செலவிடவேண்டும்.

இவற்றையும், இவைபோன்ற பல முறைகளையும் கையாள்வதன் மூலமாக, தேவையான அளவு பணம் திரட்டி, போதுமான அளவு பள்ளிகளைத் துவக்கி, எல்லாப் பிள்ளைகளையும் படிக்கும்படி செய்ய முடியும்.

2. வறுமையின் காரணமாக இப்போது பள்ளிக்கூடத்தில் சேராமல் இருக்கின்ற பிற்பட்ட வகுப்புப் பெற்றோர்களின் பிள்ளைகளையும், ஏழைப் பெற்றோர்களின் பிள்ளைகளையும், பள்ளிக்கூடத்தில் சேரும்படிச் செய்ய வழி என்ன ?

பிள்ளைகள், பள்ளிக்கூடம் போகாமல் தங்களோடு இருந்தால், ஏதோ நான்கு காசுகள் சம்பாதிக்கும், அதனால் தங்களுடைய வறுமை சிறிதளவு குறையும் என்று ஏழைப் பெற்றோர்கள் எண்ணுகின்றனர். பிள்ளைகள் பள்ளிக்கூடம் போகத் தொடங்கினால், அவர்களால் தங்களுக்குக் கிடைக்கிற ஊதியம் நின்று போவதோடு, அவர்களுக்கென்று, பள்ளிக்கூடச் சம்பளம்—பலகை புத்தகம் பென்சில் முதலியன வாங்கவேண்டிய கடமை ஆகிய பல புதிய செலவுகளும் உண்டாகின்றனவே என்றும் மேற்படி பெற்றோர்கள் வருந்துகின்றனர்.

— (44–ம் பக்கம் பார்க்க) —

"முதல் மாதிரி"

(எஸ். பூமிநாதன், பி.ஏ., பி.டி.)

குறிப்பு:—முதல் படிவ சமூக பாடத்திற்கு உரியது.

"தந்தையே! தயவுசெய்து எனக்கு ஒரு "வயலின்" வாங்கித் தருகிறீர்களா?" இவ்வாறு கேட்டான் அவனுடைய தகப்பனைப் பார்த்து சாமுவேல் கிராம்ப்டன் (Samuel Crompton).

நூல் நூற்றுக்கொண்டிருந்த ஸீனியர் கிராம்ப்டன் தலையை நிமிர்ந்து, மகனை ஒரு முறை பார்த்தான். சிறுவன் கிராம்ப்டனோ ஆவல் ததும்பும் பார்வையால் தந்தையின் பார்வையை எதிர்கொண்டழைத்தான்.

ஒரு விநாடி யோசனைக்குப் பிறகு தலையை அசைத்தான் தந்தை. பிறகு பேசினான்:

"மகனே! நமது வயிற்றை நிரப்புவதற்குத்தான் நமது வருமானம் போதுகிறது. நீயோ சிறுவன். நூல் நூற்கும் அளவுக்கு நீ பெரியவனானால், ஒரு வேளை வயலின் வாங்க வாய்ப்புண்டாகலாம்; உன் விருப்பமும் நிறைவேறும்"

அன்றிலிருந்து சிறுவன் கிராம்ப்டனும் குடும்பத் தொழிலில் ஈடுபட ஆரம்பித்தான். கிராம்ப்டன் குடும்பத்தார், நூல் நூற்றல், ஆடை நெய்தல் இவற்றை வீட்டிலேயே செய்து வந்தவர்கள். அவர்களது ஜீவனத்துக்கும் அதுதான் ஊதியமும் தேடித் தந்தது.

சாமுவேல் கிராம்ப்டன் தீவிரமாக நூற்றல் தொழிலில் ஈடுபட்டான். வேகமாக நூல் நூற்க வேண்டுமென்று ஆசைப்பட்டு அப்படியே செய்தான். எவ்வளவுக் கெவ்வளவு வேகமாக வேலை செய்தானோ அந்த அளவு வேகத்தில் நூற்கும் நூல்களும் தெறித்து வீணாயின. தனக்கு நிறைய ஓய்வு நேரம் தேவையென்று வேகமாக வேலை செய்தால், வேலை பாழானதைப் பார்த்துப் பார்த்து சிந்திக்கத் தலைப்பட்டான் கிராம்ப்டன்.

அப்போது அவனுக்கு வயது 21. வேகமாக, ஆனால் அதே சமயத்தில் பழுதுபடாமல் நெய்யும் முறையொன்றைக்கண்டுபிடித்தாகவேண்டும் என்ற எண்ணம் அவனதுஇதயத்தில் உருவானது. உருவான அந்த எண்ணத்தால் உந்தப்பட்டவனாக ஐந்து ஆண்டுகள் ரகசியமாக எவருக்குஞ் சொல்லாது, யாரும் அறியாத வகையில் பரிசோதனையில் ஈடுபட்டான் கிராம்ப்டன்! முடிவில் அந்த முயற்சியில் வெற்றியே பெற்றான். அதாவது பிரசித்தி பெறப்போகும் "ஸ்பின்னிங்—

மியூல்" என்ற இயந்திரத்தைக் கண்டுபிடித்தான்.

மென்மையும் உறுதியுமான நூல் மிக விரைவில் "மியூலில்" நூற்கப்பட்டது!

அந்த "மியூலை"க் கண்டுபிடித்த விநாடியிலிருந்தே தனது உயிருக்கே ஆபத்தை அவன் தேடிக் கொண்டான். அறிவானது சிறப்பாகப் பரவியுள்ள இந்த நாளில் அதைப் புரிந்துகொள்ள முடியாது! "நல்லதோர் யந்திரத்தைக் கண்டுபிடித்தது குற்றமாகுமா? அதனால் உயிருக்கு ஆபத்தா?" என வியந்துகொள்வர் இந்நாளைய மக்கள்! ஆனால் அன்றோ ......?

மனித உழைப்பைக்குறைத்து, நேரச் சிக்கனத்தில் தொழில் நடத்த உதவும் எந்தப் புதிய கண்டுபிடிப்பையும் 'தொழில் சமூகம்' அப்பொழுதெல்லாம் மிக மிகக் கடுமையாக எதிர்த்து வந்தது!

கிராம்ப்டன் 'மியூலை'க் கண்டு பிடிக்குமுன், ஹார்கிரீவ்ஸ் (Hargreaves) என்பவர் "ஸ்பின்னிங் ஜென்னி" என்ற நூல் நூற்கும் யந்திரத்தைக் கண்டுபிடித்திருந்தார். ஆனால், அதில் நூற்கும் நூல்பலமற்றதாக இருந்தது.

ஹார்கிரீவ்ஸ், பிளாக்பர்ன் (Blackburn) எனும் இடத்தைச் சேர்ந்தவர். கிராம்ப்டன், 'மியூலை'க் கண்டுபிடித்த, அதேசமயம், பிளாக்பர்னைச் சேர்ந்த நெசவாளிகள், ஹார்கிரீவ்ஸ்ஸை அவருடைய வீட்டிலிருந்து துரத்தியதோடு நிற்காமல்கண்ணில் தென்பட்ட 'ஜென்னிகள்' அத்தனையையுமே நொறுக்கி எறிந்துவிட்டார்கள். கண்டுபிடிப்புகளுக்கு அத்தனை எதிர்ப்பு!

இதை அறிந்த கிராம்ப்டன், தன்னுடையமியூலுக்கும், அந்தக் கதி நேர்ந்துவிடுமோ என்று அஞ்சி, மியூலின் பாகங்களைத் தனித்தனியாகப் பிரித்து, அவற்றைப் பரணியில் ஒளித்து வைத்தான்! நெசவுத்தொழிலிலேயே, பின்னால் பிரமிக்கத்தக்க புரட்சிகரமான மாறுதலை ஏற்படுத்திய அந்த 'மியூல்', தனித்தனி பாகங்களாக்கப்பட்டுப் பரணுக்குள் பதுங்கிக்கிடந்தது!

ஒருவாறு அமைதி நிலவ ஆரம்பித்ததும், தன்னுடைய அற்புதமான கண்டுபிடிப்பைப் பயன்படுத்த ஆரம்பித்தான் கிராம்ப்டன்! விளைவு வியக்கத்தக்க வகையில் அமைந்தது. இங்கிலாந்திலேயே கிராம்ப்டனின் நூல்தான் சிறந்ததாக இருந்தது! நூல் சந்தையையே ஒரு கலக்குக் கலக்கியது அவனுடைய நூல்! மஸ்லின் போன்ற உயர்ந்த வகை துணி நெய்தலில் சிறந்த இந்திய நாட்டின் நூல்களுக்கும் சமமாக இருந்தது அவனுடைய நூல்!

வியாபாரிகள் கிராம்ப்டனைச் சுற்றிவர ஆரம்பித்தார்கள். அவனுடைய மியூலின் உற்பத்திக்கு அத்தனை கிராக்கி! 'ஆர்டர்கள்' குவிந்தன!

தன்னுடைய கண்டுபிடிப்பான மியூலைத் தானே பயன்படுத்தினுனே தவிர அதை விற்பனைப் பொருளாக மாற்றவில்லை. அவ்வாறு தயாரித்துவிற்றிருந்தானேயானல், ஒருபெரும்பணக்காரனுக அவன் இருந்திருப்பான்!

அவனுடைய மனைவி அவனுக்குத் துணையாக நிற்க, வந்து குவிந்த ஆர்டர்களைச் சமாளிக்க முயன்றான் கிராம்ப்டன்! இரவு பகலாகப் பாடுபட்டனர் அத் தம்பதிகள்!

அவனுடைய நூற்பு முறையைக் கண்டறிய உளவுகள் நடந்தன! மியூலை அழித்துவிடவேண்டும், இல்லை அதை உலகிற்கு அன்பளிப்பாக்கிவிட வேண்டும் என்ற முடிவுகளில் ஒன்றை நிச்சயிக்கும் நிலை வந்தே தீர்ந்தது!

மியூலும் பொதுஜன சொத்தாக்கப்பட்டது. நூற்பதில் உண்டான அந்தப் புது மாற்றத்தால் பருத்தி நெசவுத் தொழில் நாட்டில் பரந்து விரிந்தது. 1812–ல் தான் இங்கிலாந்து முழுதும் பருத்தி நெசவில் உண்டான மாற்றத்தின் காரணகர்த்தா கிராம்ப்டன் என்பதை அறிந்தது. அந்தக் கண்டுபிடிப்பாளனுக்கு (Inventer) ஏதேனும் உபகாரத் தொகை தந்தாகவேண்டுமென்ற தீர்மானம் பார்லிமெண்டின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது!

அந்தத் தீர்மானமோ கருதப்படாமலேயே, ஒதுக்கி வைக்கப்பட்டது!

கிராம்ப்டனை துரதிர்ஷ்டம் தொடர ஆரம்பித்தது! அவன் வாழ்நாளில் கடைசி பன்னிரண்டு ஆண்டுகளைக்|கழிப்பதே தசிரமமாகிவிட்டது.

தங்களது ஒப்பற்ற கண்டுபிடிப்புகளை உலகிற்கு நன்கொடையெனத்தந்த மேதைகளின் வரிசைகளில் தலைசிறந்த கிராம்ப்டன், ஆண்டொன்றுக்கு அவனது நண்பர்கள்சேகரித்துத்தந்த 62 பவுனில் கடைசி பன்னிரண்டு ஆண்டுகளைக் கழித்தான்!

இதுதான், இன்றைய நெசவாலைகளில் மின்சார வசதியில் இயங்கும்நூற்பு இயந்திரங்களின், முதல் மாதிரியைச் செய்து, நெசவுத் தொழிலில் முன்னேடும் பிள்ளையாயிருந்த சாமுவேல் கிராம்ப்டனின் சரிதை! அசாதாரணமான வேலையைச் செய்து முடித்த ஒருவனின் சாதாரணக் கதை!

(போதனுவிஷயப் பூங்கொத்து)

கனவுகள்

★

எல்லோரும் கனவு காண்கின்றனர். சிலர் தாங்கள் கண்ட கனவைநினைவிற்குக்கொண்டு வர இயலாத காரணத்தால் தாங்கள் காண்பதில்லை என்று எண்ணுவர். அறிவியற் கருத்துக்கள் பரவி நிற்கும் இக்காலத்தில் கனவுகள் பற்றிக் கலக்கம் கொள்ள வில்லை என்றாலும் இன்னும் பலர் தெளிவற்ற கருத்தையே கொண்டிருக்கின்றனர். பலரிடமிருந்து கனவைப் பற்றிய மூடக்கொள்கைகள் அகன்ற பாடில்லை. அண்மையில் மதுரையில் ஒரு அன்பர் தம் கனவில் மீனாட்சியம்மை தோன்றி வைர நகை வேண்டுமென்று கேட்டாளாம்; அன்பர் அலறித்துடித்து மறு நாளே வைர நகைகளைக் கோவில் அதிகாரிகளிடம் சேர்த்தாராம். இருபதாம் நூற்றாண்டிலேயே இந் நிலையென்றால், இயற்கையின் தன்மைகளைக் கண்டு அஞ்சி நடுங்கிய அன்றைய நாட்களில் மூடக் கொள்கைகள் மிகுந்து காணப் பட்டதை எண்ணி வியப்பதற்கில்லை.

ஆரம்ப காலத்தில் மனிதன் நெருப்பைக் கண்டான்—வியந்தான். ஆனால் அதன் ஆற்றலைக் கண்டு பயந்தான். அந்தப் பயத்தின் அடிப்படையிலே எழுந்த மூடக்கொள்கையின் காரணமாக நெருப்பை ஒரு தேவனாக்கி, தனது வழிபாடுகளையும், காணிக்கையையும் செலுத்தினான். மின்னலைக் கண்டான்; பேரிடியைக் கேட்டான்; அடை மழையைக் கண்டான்; கோரப் புயலைக் கண்டான்; கடும் வெள்ளத்தால் ஏற்படும் அழிவைக் கண்டான். இயற்கையின் தன்மைகளை உய்த்துணர முடியாத அவனுடைய உள்ளத்தில் பயம் குடிகொண்டது. ஒவ்வொன்றிற்கும் ஒரு தேவனை ஏற்படுத்தி வழிபாடுகள் உரைத்து, காணிக்கைகள் செலுத்தித் தன்னைக் கொடுமைகளினின்றும் துன்பங்களினின்றும் காப்பாற்ற வேண்டினான்.

இவ்வித சூழ்நிலையில் அவன் கனவுகள் காண ஆரம்பித்தான். அவை ஏன் நிகழுகின்றன? எப்படி நிகழுகின்றன? என்று அறியத் திறனில்லாத அவன் பல மூடக்கொள்கைகளைப் பரவவிட்டான். கனவுகள் கடவுளால் மனிதனுக்கு தூக்க நேரத்தில் அனுப்பப்படும் செய்திகள் என்று எண்ணினான். கனவில்காண்பவை அப்படியே நிகழக்கூடியவை என்று நம்பினான். பண்டைய கிரேக்கர், உரோமர், எகிப்தியர் ஆகியோர் தனியே ஒரு கனவுத் தேவனையே கொண்டிருந்தனர். எல்லா இனத்தாரிடையேயும் கனவைப் பற்றிப் பலப்பல மூடக் கொள்கைகள் மிகுந்து காணப்

பட்டன். பல்லிபலன் காண்பது போல், கனவுப் பலன் காண்பது முக்கியமாகக் கருதப்பட்டது. கனவுகளை, நன்மை விளைவிப்பவை, தீமை விளைவிப்பவை என்று பிரித்தனர். இவையிவை காணக்கூடிய கனவுகளென்றும், இவையிவை காணக்கூடாக்கனவுகளென்றும் வகுத்தனர். கனவுகள் செல்வத்தையும், சுகத்தையும், வறுமையையும், நோயையும் தரவல்லன என்று எண்ணி, நன்மைதரும் கனவுகளையே காண கனவுத்தேவனை வேண்டினர்.

மூடக்கொள்கைகள் என்றபடிக் கட்டுகளில் ஏறி, மதம் என்ற மண்டபத்தில் நுழைந்து பல காலம்வரை வாழ்ந்தனர். அறியாமை இருளிலிருந்து அறிவு ஒளியைக் காண அவர்கள் வெளிவரவில்லை. சிந்திக்க மறுத்தனர்; சிந்திப்பவனையும் வெறுத்தனர். என்றாலும் மதம் அறிவியலோடு போரிட்டு வெற்றி பெற முடியவில்லை. அறிவியல் அறிஞர்கள், இயற்கையின் தன்மைகளை ஆராய்ந்து பல உண்மைகளை வெளியிட்டனர். கனவுகள் பற்றியும் உளநூல் அறிஞர்கள் ஆராய்ந்து முடிவுகளைக் கண்டிருக்கின்றனர். கனவுகளைப் பற்றி எழுந்த ஒவ்வொரு ஐயங்களுக்கும் விளக்கம் தந்துள்ளனர். அவைகளில் சிலவற்றைக் கீழே காணலாம்.

கனவுகள் எங்கிருந்து வருகின்றன ?

மனிதனது மனம் விழிப்புள்ள நிலை விழிப்பற்ற நிலை என்ற இரு நிலைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. விழிப்புள்ள மனம் உடலின் பல்வேறு இயக்கங்களைக் கவனித்து வருகிறது. விழிப்பற்ற மனதில், ஆர்வம், பயம், இடையூறுகள், விருப்பம் ஆகியவைகள் நிரம்பியுள்ளன. விழிப்புள்ள மனம் விழிப்பற்ற மனதை எப்பொழுதும் கவனித்து, குறை கண்டுபிடித்து அதனை இயங்கவொட்டாமல் தடுக்கின்றது. தூக்க நேரத்தில் விழிப்புள்ள மனதின் "குறை காண்" இயக்கத்தின் திறன் சிறிது குறைக்கப்படுகிறது. இதனால் விழிப்புள்ள விழிப்பற்ற ஆகிய இரு நிலைகளினிடையேயுள்ள தடுப்புகள் தளர்த்தப்படுகின்றன. விழிப்புள்ள மனம் விழிப்பற்ற மனதில் நடப்பவைகளைச் சிறிது காண முடிகிறது. இவையே கனவாக நமக்குத் தோன்றுகிறது. விழிப்புற்றிருக்கும்போது விழிப்புள்ள மனதின் "குறைகாண்" இயக்கம் திறன் பெற்றதாகிச் சுற்று இயக்கங்களுக்குச் சரியாக வேலை செய்கிறது. போதை தரும் பொருளை உட்கொள்ளும்போதும், குளோரோபாரம் முதலிய மருந்துகளை முகரும்போதும் "குறைகாண்" இயக்கத்தின் திறன் சிறிது குறைக்கப்படுகிறது. பைத்தியம் பிடித்த நிலையில் 'குறைகாண்' இயக்கம் அறவே மறைந்து விடுகிறது.

கனவு காணும்போது உள்ள பண்பிற்கும் விழிப்புற்றிருக்கும் போது உள்ள பண்பிற்கும் வேறுபாடு இருக்கின்றதா ?

இது கனவு காண்பவரைப் பொறுத்திருக்கிறது. விழித்திருக்கும்போது காணும் ஒருவரையே கனவிலும் கண்டால் அது நல்ல மனவலிவு உள்ளதைக் குறிக்கும். முற்றிலும் வேறுபட்ட ஒருவரைக் கனவில் காணுதல் நரம்புத் தளர்ச்சியைக் குறிக்கும்.

கனவுகளைப் பலவகைகளாகப் பிரிக்கலாமா ?

கிரகம் அவே என்பவர் கனவுகள் கீழ்க்காணும் வகைகளுள் அடங்கலாம் என்று கண்டு பிடித்துள்ளார்.

1. விருப்பம் நிறைவேறும் கனவுகள்

குழந்தைகளின் பொம்மைகள் பெறும் கனவுகள். பெரியவர்களின் பொருள் தேடிடும் கனவுகள். வெறுத்தொதுக்கப்பட்டவர் இறந்ததாகக் காணும் கனவுகள்.

2. கவலை நிரம்பிய கனவுகள்

புகைவண்டி ஏறத் தவறிவிடுதல், அடியில்லாப் பள்ளத்திலிருந்து வெளியேற முயற்சித்தல் முதலிய கனவுகள், எடுத்த காரியத்தை முடிக்கத் தடைப்படுமோ என்ற பயத்தைக் குறிக்கலாம்.

3. கருத்துள்ள கனவுகள்

இக்கனவுகளால் சிக்கல்கள் தீர்க்கப்படலாம். அல்லது மேற்கொள்ளவேண்டிய வழிகள் தோன்றலாம்.

4. தன்குறை கூறும் கனவுகள்

இக்கனவுகள் காண்பவர் செய்யும் தவறுகளை எடுத்துக்காட்டும்.

5. திரும்பக் கூறிடும் கனவுகள்

இக்கனவுகளில், காண்பவரின் அன்றைய அனுபவங்கள் திரும்பத் தோன்றலாம்.

கொடுங் கனவு (Nightmare) என்றால் என்ன ?

இக் கனவுகளை எல்லோரும் காண்பதில்லை. நூற்றுக்குச் சுமார் இருபது பேர்தான் காண்கின்றனர். அநேகமாக இவை துன்பக் கனவுகளாகவே முடியும். வாய்விட்டு அலறுதல், திடீரென விழித்துப் பீதியடைதல் இவைகள் இதற்கறிகுறிகளாகும். இக்கனவுகள் உடலின் உள் எதிர்ப்புகளை வெளிப்படுத்துகிறதென்றும், அது கடுமையான உளவியல் செயல்களைத் தூண்டுவதால், கனவு வகைகளிலேயே முக்கியமானதென்றும் உளவியல் வல்லுநர் கருதுகின்றனர். இருதய நோயுடையவர்களும், இரத்த அமுக்க நோயுடைவர்களும் இக் கொடுங் கனவுகளால் பல சமயங்களில் இறந்துவிடுவதும் உண்டு.

கனவுகளின் தனிச்சிறப்பு என்ன ?

விழிப்புற்றிருக்கும்போது ஒருவனது எண்ணங்களும் செயல்களும் அவனது பண்பை வெளிப்படுத்துவதைக் காட்டிலும் தூங்கும்போது கனவுகள் அவனது பண்புகளை அதிகமாகத் தெரிவிக்கின்றன. ஆனால் கனவுகளை அப்படியே எடுத்து ஆராய்தல் தவறு. கனவுகள் வெறும் குறிப்புகளே. அவைகளின் பொருள் கற்பனை உருவகங்களிலே புதைந்து கிடக்கின்றன.

விழிப்புள்ள மனம், விழிப்பற்ற மனதின்மீது எப்பொழுதும் கவனத்துடன் குறைகண்டு கொண்டு இருப்பதால் விழிப்பற்ற மனம் தன்னை மறைத்து அதன் செய்திகளை உருவகக் காட்சிகளாக மாற்றி, விழிப்புள்ள மனதின் 'குறைகாண்' அமைப்பை ஏமாற்றிக் கனவுகளாகத் தருகின்றது. இந்தக் 'குறைகாண்' கவனிப்பால் விழிப்புள்ள மனம், தெரியாதவைகளைப் பற்றி இயல்பால் அமைந்த, காரணம் அறிய இயலாத பயத்தால் (விழிப்பற்ற மனம்) தாக்கப்படாமல் காக்கப்படுகிறது.

கனவுகள் பற்றிய பலனை அறிய முற்படலாமா ?

உளநூல் வல்லுநர் அப்படிச் செய்யக்கூடாதென்று கூறுகின்றனர். கனவுகள் கற்பனை உருவகங்களான சிக்கல் நிறைந்த அமைப்புகள். அதன் கருத்து காண்பவரைப் பொறுத்து வேறுபடுகிறது. கனவுகளின் பலனைச் சரியாக அறியவேண்டுமானால் முதலில் உளநூல் வல்லுநர் கனவு காண்பவரின் பண்புகளைப் பற்றியும், பின் கனவின்பொருள்களையும், காணபவரின், எண்ணங்கள், உணர்ச்சிகள், அனுபவங்கள்—இவைகளை ஒப்பிட்டு அறிதல் வேண்டும். இவ்வளவும் செய்தபின் கனவின் உட்பொருள் விளங்கினாலும் அதனால் அவன் அடைகிற அல்லது அடையப் போகிற நன்மை அல்லது தீமை எதுவுமில்லை. மனித எண்ணத்திற்கு எல்லையே இல்லை. ஒரு நாட்டிற்கு மன்னனாக வேண்டுமென்று எண்ணலாம். செல்வச் சீமானாக உலவவேண்டுமென்று எண்ணலாம். ஆனால் இந்த எண்ணத்தைக் கூறி, எண்ணியது நடக்கும் என்று கூறினால், எங்ஙனம் முடியும்? அதுபோன்றே விழிப்பற்ற மனதில் எழுகின்ற, விருப்பு, வெறுப்புகளடங்கிய கனவுகள் நிகழக்கூடியவையல்ல. ஆகவே நிகழமுடியாத ஒன்றைப் பற்றிக் கவலைகொள்ளவேண்டிய அவசியமுமில்லை.

உடல்நிலை, ஆகாரம், முதலியன, கனவுகள் தோன்றக் காரணமாக இருக்கமுடியுமா ?

இருக்க முடியும். விழுவது போன்ற கனவு, உடல் பளுவால் தோய்வு ஏற்படுகின்ற மெத்தையினால் ஏற்படலாம். விழிப்பற்ற மனம் உடலின் உணர்ச்சிகளை அறிய முற்படும்போது பலவித கற்பனை உருவக கனவுகளை வகுக்கின்றது. உடலுணர்ச்

சிகளால் தூண்டப்பெற்ற கனவுகளின் தன்மை விழிப்பற்ற மனதால் இயக்கப்படுகிறது.

அன்னாசி, பனான், வெள்ளரி முதலியவைகள் கனவுகள் காணும் தன்மையைத் தூண்டிவிடும். இருப்பினும் கனவுகள் அதிகமாக உடல் தூண்டுதல் இல்லாமலே ஏற்படுகின்றன.

கனவுகளில் அதிகமானவை சிற்றின்பத்தை உட்பொருள் கொண்டதாக இருக்கும் என்பது உண்மையா ?

உண்மை என்று விரூட் என்பார் கூறுகிறார். ஆனால் இதைப் பலர் மறுக்கின்றனர். கிளெயின் என்பார் விரிந்த ஆராய்ச்சியின் முடிவாக நூற்றுக்குப் பத்து கனவுகள்தான் சிற்றின்பத்தை உட்பொருள் கொண்டதாக இருக்கின்றன என்பதைக் கண்டார். இதனால், கனவுகளை மற்றவருக்குத் தெரிவிப்பதில் கவலை கொள்ளவேண்டியதில்லை.

கனவுகள் எவ்வளவு நேரம் நீடிக்கின்றன ?

மின்சார அளவுகள் கொண்டு ஆராய்ந்ததில் அதிகமான கனவுகள் 2—லிருந்து 3 நிமிடங்கள் வரை நீடிக்கின்றன. நினைவிற்கு வரும் எல்லாக் கனவுகளும் காலையில் எழுவதற்குச் சிலநிமிடங்களுக்கு முன்புதான் நிகழ்கின்றன. விழிப்புற்ற பிறகு நினைவிலிருந்து மறைகின்றன.

யார் அதிகமாகக் கனவு காண்கின்றனர் ?

ஆராய்ச்சி நடத்தியதில் ஆண்களைவிடப் பெண்களே அதிகமாகக் கனவுகாணும் தன்மை பெற்றிருக்கின்றனர் என்று தெரிகிறது. 20—லிருந்து 30 வயதுள்ளவர்கள் அதிகமாகக் காண்கிறார்கள். வயதானவர்கள் காணும் கனவுகள் குறைவுதான்.

குழந்தைகளின் கனவு எப்படிப்பட்டது ?

குழந்தைகளுக்கு விருப்பங்களை மனதில் மறைத்துவைக்க வேண்டிய அவசியமில்லையாதலால் அவர்களது கனவுகள் எளியதாகவும் வெளிப்படையாகவுமே காணப்படும். வாலிப வயதில் உணர்ச்சிகள் அடக்கும் தன்மை வளர்வதால் அவர்களது கனவு கற்பனை உருவங்களோடு தோன்றும்.

கண் இழந்தவர்கள் அவர்களது கனவில் காணமுடியுமா ?

பிறவிக் குருடர்களைத் தவிர மற்றவர்கள் கனவில் காணும் தன்மை பெறுகின்றனர். பிறவிக் குருடர் காணும் கனவுகள் பெரும்பாலும் தொடும்உணர்ச்சியைக் கொண்டதாகவே விளங்கும்.

அறிவியல் எப்பொழுதாவது மற்றொருவருடைய கனவை அப்படியே அறிய முற்பட்டதுண்டா ?

மார்க்ஸ் என்னும் அறிஞர்கை களினால் பேசும் செவிட்டு ஊமையர்களின் கனவைப்பற்றி ஆராய்ந்தார். கனவுகாணும்போது அவர்களது விரல் அசைவுகள் மூலம் அதன் சைகை மொழியால் அவர்களது கனவை அறிய முடிந்தது.

கனவுகள்வருங்கால நிகழ்ச்சிகளை முன் கூட்டியே கூறுமா ?

கனவுகள் முன்கூட்டியே வருங்கால நிகழ்ச்சிகளைக் கூறவல்லன என்று பன்னெடுங் காலமாகவே மக்கள் நம்பிவந்தனர். அறிவியல் துணைகொண்டு இயற்கைத் தன்மையை ஆராயும் உள நூல் வல்லுநர் இதை மறுக்கின்றனர். ஓர் ஆயிரம் பேர் காணும் கனவுகளில் ஓரிருவர் பின் நிகழ்ச்சியை முன்கூட்டி அறிவதில் வியப்பதற்கில்லை. நாம் எண்ணுகிறபடியே ஓரிரு சமயங்களில் நடைபெறுகின்றது. ஆகவே நாம் எண்ணுவதெல்லாம் நடக்கும் என்று எண்ணுவது அறிவுடைமை ஆகாது.

(மன்றம்)

★ ★ ★

"ஆரம்பக்கல்வி" ஆபீஸ்

94-95, புதுத் தெரு, மண்ணடி, சென்னை-1.

★

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 2-8

ரிகார்ட் ஷீட்டுகள் (ஆங்கிலம்) 100 ரூ. 2-0

பிராவிடண்ட் பண்ட்கட்டும் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 2-0

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத்தாள்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 1-0

வருடாந்திர பிராவிடண்ட் பண்ட் (சரிபார்த்தனுப்பும் பாரங்கள்) (ஆங்கிலம்) 100 ரூ. 2-8

(தபால் செலவு உட்பட)

ஒவ்வொன்றிலும் 25 பாரங்களுக்குக் குறையாமல் முன்பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

சளி பிடித்ததோ, சனி பிடித்ததோ ?

பி. ஒயிட்ஹெட்

★

ஜலதோஷம் ஒரு வியாதியல்ல; உடலின் அசாதாரண நிலையின் அறிகுறி, அவ்வளவுதான். இது ஒரு ஆட்கொல்லியுமல்ல. அது மட்டும் நமக்குச் சந்தோஷம் தான். ஆனால் இது உண்டாக்கும் இடைஞ்சல்களுக்கோ அளவில்லை. விடாப் பிடியாய் நம்மைப் பிடித்துக் கொண்டால், பின் படும் கஷ்டங்கள் எண்ணற்றவை. உடலின் வலிமையைக் குறைத்து, இன்னும் அநேக வியாதிகள் வருவதற்காக வாசலைத் திறந்து வைக்கும்.

கிரேக்க பாஷையில் "கட்டார்" என்ற பதத்திற்கு ஒழுகுதல் என்று அர்த்தம். இது எவ்வளவு பொருத்தமான பெயர் பாருங்கள்! "ம்யூக்கஸ்" என்று சொல்லப்படும் சளி உடலின் உட்பாதைகளிலிருந்து கசிந்து வழிகிறது. அப்போது சளிச் சவ்வில் வீக்கம் ஏற்படலாம். இவ் வீக்கம் மூக்கில் ஏற்பட்டால் ஜலதோஷம் பிடித்திருக்கிறது என்று சொல்லுகிறோம். தொண்டை பாதிக்கப்பட்டிருந்தால், இருமல் உண்டாகிறது. குடலாய் இருக்குமானால், குடல் அழற்சி ஏற்படுகிறது. உறுப்பு எதுவாயிருந்தாலும், காரணத்தைக் கண்டுபிடித்தால் தான் தகுதியான சிகிச்சை அனுசரிக்க முடியும். மற்ற வியாதிகளின் காரணமாக வந்த அனுபந்தமாகக் கூடச் சளி பிடிக்கலாம். ஆனால் குளிர் காலத்தில் சளி பிடித்தால், சளிச் சவ்வும், அதன் உடன் தோழனாகிய சர்மமும் தம் வேலையைச் சரிவரச் செய்யவில்லை என்பது தெளிவு. வைத்திய சாஸ்திரத்தின்படி இவ்விரு உறுப்புகளும் ஒன்றே. உடலை வியாதிகளினின்றும், அசுத்தங்களினின்றும் காப்பாற்றும் பொறுப்பு இவைகளுடையது. இரண்டும் சேர்ந்தே உடலின் உஷ்ண நிலையை ஒரே சீராய் வைத்துக் கொள்ளுகின்றன. விஷப் பொருட்கள் உடலிலிருந்து வெளியேற்றப்படுவதும் இவற்றின் மூலமாய்த்தான்.

ஜீரணப் பாதை, வாயில் ஆரம்பித்து, ஆசனத்தில் முடிவடைகிறது. உணவு இவ்வழியின் மூலமாய் இலகுவில் செல்வதற்கு, இப்பாதை எப்பொழுதும் ஈரமாக வைக்கப்பட்டிருக்க வேண்டும் அல்லவா? அங்கு இருக்கும் சளிச் சவ்வு இவ் வேலையைச் செய்கிறது. மேலும் நாசியினுள் இருக்கும் சளிச் சவ்வு உள்ளே இழுக்கப்படும் காற்றிற்குத் தகுந்த ஈரத்தையும் கொடுத்து உதவுகிறது.

மேற் சொன்ன அலுவல்கள் எல்லாம் திறம்பட நடத்தப்பட

வேண்டுமானால், சர்மமும் சளிச் சவ்வும் சீருடன் ஒத்து உழைக்க வேண்டும். சூரிய வெளிச்சமும் காற்றும் சர்மத்தின் மேல் படாமல், நமது நவ நாகரீக உடைகள் தடுத்து விடுகின்றன. எனவே இங்கு இரத்த ஓட்டம் குறைந்து சர்மத்தின் சக்தி குறைவுபடுகிறது. அப்படியானால் இது செய்ய வேண்டிய சில வேலைகளைச் சளிச் சவ்வு செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விடுகிறது. தனது சக்திக்கு மேல் உழைப்பில் ஈடு பட்டிருக்கும் சளிச் சவ்வு, குளிர்ந்த காற்று, தூசி முதலியவற்றால் அழற்றப் படும் போதும், குடலில் ஜீரணிக்காத உணவு தங்கித் தாமதிக்கும் போதும், வீக்கம் அடைகிறது.

இந் நிலை நீடிக்குமானால், சளிச் சவ்வு இன்னும் கொஞ்சம் சளியை வெளியே தள்ளுகிறது: இது விரைவில் அப்புறப்படுத்தப் படாததால் உறைந்து, கட்டிச் சளியாக மாறுகிறது. இதை இருமி இருமி வெளியே தள்ளப் பிரயாசைப்படுகிறோம். சில சமயங்களில் இந் நிகழ்ச்சியில் தொண்டை வறண்டு போவதுமுண்டு.

ஜலதோஷம் பிடித்து விட்டது என்றால் என்ன அர்த்தம்? (1) சர்மம் நிர்விசாரமாக இருக்கிறது. (2) இரத்த ஓட்டம் சுதாரிப்பாக இல்லை, (3) உட்கொள்ளும் உணவு பொருத்தமில்லை. இத்துடன் சீதோஷ்ண நிலையும் சீர்கெட்டிருந்தால், நாம் படுகிற கஷ்டம் கொஞ்சம் நஞ்சம் அல்ல.

ஜலதோஷத்தைத் தடுப்பது ஒரு நாளில் ஆகிற காரியமல்ல. திட்டம் போட்டு, எதிர்த்துப் போராடி வந்தால்தான், முடியும்.

ஜலதோஷத்தின் வாதனையை ஓரளவு போக்க சில சாதனங்கள் இருக்கத்தான் செய்கின்றன. உதாரணமாக கொதி தண்ணீரில் ஒன்று இரண்டு சொட்டு "பிரயர்ஸ் பால்ஸம்" (Friar's Balsam) என்ற மருந்தை ஊற்றி, ஆவியை முகரலாம். பூரண சுகம் அடைய வாரக் கணக்கில் கட்டுப்பாடான சிகிச்சை செய்ய வேண்டியது அவசியம். முதலாவது சர்மத்திற்குப் புத்துயிர் ஊட்டுங்கள். முரட்டுத் துவாலை அல்லது துணியைக் கொண்டு காலையிலும் மாலையிலும் நன்றாகத் தேய்த்து விடுங்கள். இது இரத்த ஓட்டத்தைத் துரிதப்படுத்தும். ஒவ்வொரு நாளும் அரை மணி நேரமாவது திறந்த வெளியில் தேகாப்பியாசம் எடுத்துக் கொள்ளுங்கள். காற்றும் வெய்யிலும் சர்மத்தின் மேல் படட்டும். "அல்ட்ரா வயலட் சூரிய ஒளி" சிகிச்சை செய்வது மிகுந்த பலனை அளிக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை. அழுத்தமற்ற, இறுக்கமில்லா ஆடைகளை அணிவது அவசியம். இப்படி இருந்தால் தானே, சர்மம் சுவாசிக்க முடியும்?

ஜலதோஷம், பிடித்திருந்தால், அநேகருக்குக் கால் குளிர்ந்திருக்கும். இதுவே திருப்தியற்ற

இரத்த ஓட்டத்திற்கு உதாரணம். அப்படிப்பட்டவர்கள் ஒரு நிமிஷத்திற்கு பாதத்தை உஷ்ண நீரிலும், பிறகு பனி போல் குளிர்ந்த நீரிலும் மாற்றி மாற்றி வைத்து எடுக்க வேண்டும். இப்படி ஐந்து, ஆறு தடவை செய்தவுடன், பாதத்தை நன்றாகத் துடைத்துவிட்டு, கொஞ்சம் தேங்காய் எண்ணெயைப் பூசிவிட வேண்டும். இந்தச் சிகிச்சையின் விளைவால், இரத்த ஓட்டம் துரிதப் பட்டு, உடல் தகதக வென்று சுக நிலை அடையும்.

சில உணவுகள் இயற்கையாகவே சளியை உண்டுபண்ணக் கூடிய தன்மை வாய்ந்தவை. இப்படிப்பட்ட உணவு வகைகளையே நாம் உபயோகித்து வந்தால், எப்படி ஜலதோஷத்திற்கு ஒரு முடிவு கட்ட முடியும்? பால், வெண்ணெய், தயிர் முதலியவற்றை விட்டுவிட வேண்டும். கொழுப்புப் பதார்த்தங்களும், எண்ணெயில் பொரித்தவைகளும் கூடாது. புது ரொட்டி, சாக்லெட்டு, டாபி முதலியவைகளைத் தள்ளி வைத்து விட வேண்டும். கொக்கோ, டீ, காபி முதலிய பானங்கள் கிட்டவும் நெருங்கக்கூடாது. ஆனால் பழ வகைகளையும், காய் கறிகளையும் தாராளமாய் உபயோகிக்கலாம்.

வயிறு புடைக்க சாப்பிட வேண்டுமென்ற அவசியமே இல்லை. ஊக்கம் ஊட்டும் உணவாக இருக்க வேண்டும். செல்களைக் கட்டி, அவைகளுக்கு வலு ஊட்டக் கூடிய அளவுக்கு உணவுச் சத்து அமைந்திருக்க வேண்டும். இப்படிப்பட்ட உணவு, சளியை வளர்க்காது, சளியின் ஆக்கிரமிப்பிலிருந்து உடலைக் காக்கக் கூடியதாயிருக்கும்.

— **நல்வழி**

அறிஞரின் தேன் துளிகள்

துன்பத்தைப் பொறுக்கக்கூடியவனால்தான் எந்தச் செயலையும் செய்ய முடியும்.

— *மில்டன்.*

இனிய சொற்களை வழங்குவதால் நாக்கு நோயடைவதில்லை.

— *ஹேவுட்.*

ஏழைகளுக்கு நாம் செய்யக்கூடிய ஒரே நல்லுதவி அவர்கள் தம்மைத்தாமே உதவுவதின் சிறப்பை அவர்களுக்கு அறிவுறுத்துவதே.

— **சம்னர்.**

இல்லத்தின் ஜோதி

(D. E. மாசிலாமணி. ஆசிரியர், போதனா முறைப்பள்ளி, விருதம்பட்டு.)

★

ஒருநாள் சாக்ரடிஸ் பல கிராமப் பள்ளிகளுக்குச் சென்று, "சிறு பெண்கள் எங்கே?" என்று ஆசிரியர்களிடம் வினவினார்.

"பெண்பிள்ளைகள் இக்கிராமத்தில் பாடசாலைக்கு வருவதில்லை" என்று பலவிடங்களில் சொன்னார்கள். பிறகு ஒரு கிராமத்திற்குச் சென்று, "இக்கிராமத்தில் பெண் குழந்தைகளே இல்லையா?" என்று கேட்டார்.

அதைக் கேட்டு நகைத்த கிராம அதிகாரி, "பெரியாரே! இங்குதான் பெண் குழந்தைகள் அதிகம். இவர்களால்தான் பெற்றோர்களுக்கு அதிகமான செலவுகள். அதோ அங்கு சிலர் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள், பாருங்கள்" என்று சுட்டிக்காட்டினார். பள்ளிக்கூடத்துக்கு வந்த காரணத்தால் சற்று சுத்தமாயிருந்த சிறுவர்களையும், வராத காரணத்தால் அலங்கோலமாய் விளையாடிக் கொண்டிருந்த சிறுமிகளையும் பெரியார் கண்டு வருந்தினார்.

"ஐயா! இப்பெண் குழந்தைகள் தாய்மார்களாகும் போது அவர்கள் சொந்தக் குழந்தைகளை நன்றாக வளர்க்கவேண்டிய பெரும் பொறுப்பு அவர்களுடையது அல்லவா?" என்று சாக்ரடீஸ் வினவியதும்,

"ஈசன் சித்தமானால் எல்லாம் நன்றாய் நடக்கும். இந்த சிறுமிகளின் பின் சந்ததியாரைப்பற்றி நீர் ஏன் வீண் கவலை கொள்கிறீர்?" என்று கேட்டார் கிராமத் தலைவர்.

"சிறுவர்களைவிட சிறுமிகளைப் பற்றியே நான் அதிகம் கவலைப்படுகிறவன். ஆண்பிள்ளைகள் கற்ற கல்வி பின்பு வெளிவேலையில் முடிந்துவிடும். ஆனால் பெண்கள் கல்வி கற்றாலோ அதனைத் தங்கள் பிள்ளைகளுக்குக் கற்பித்து அநுகூலப்படச் செய்வார்கள். ஆகவே அது மிக முக்கியமல்லவா?" என்றார் சாக்ரடிஸ். "அதுவும் யோசிக்கப்பட வேண்டிய விஷயம் தான்" என்று கூறிய பின்பு சாக்ரடிஸிடம் விடைபெற்றுக் கொண்டு வேகமாய்ச் சென்றார் கிராம அதிகாரி.

பின்பு சாக்ரடிஸ் அருகிலிருந்த ஒரு கிராமப்பாடசாலைக்குச் சென்று, அங்கிருந்த மாணவர்களை நோக்கி, "அருமைத்தம்பிகளே! உங்கள் சகோதரிகள் ஏன் இங்கு வரவில்லை?" என்று கேட்டார். பெரியாரின் வினா

வைக்கேட்டு வியப்படைந்து, மாணவர்கள் வாளாவிருந்தனர்.

சாக்ரடிஸ், ஆசிரியரின் அனுமதி பெற்று, பிள்ளைகளுக்கு ஒரு கதை சொல்லப்போவதாகக் கூறினார். பிள்ளைகளை நேசிக்கும் குணம் படைத்த அப்பெரியார் அவர்களுக்கேற்ற இனிமையான கதை சொல்வாரென்று எண்ணி, பிள்ளைகள் முகமலர்ச்சியும் உற்சாகமும் அடைந்தனர்.

சாக்ரடிஸ் கூற ஆரம்பித்தார்:

வெகு காலத்திற்கு முன்பு ஞானமுள்ள ஒரு அரசன் ஒருசிறு நாட்டை ஆண்டுவந்தான். அக்காலத்தில் மக்கள் அவர்களுக்கேற்ற வீடு கட்டிக்கொள்ளத் தெரியாத காரணத்தால் மலைகளில் வெட்டப்பட்ட குகைகளில் குடும்பம் குடும்பமாக வசித்துவந்தார்கள். இரவுநேரங்களில் குகையில் வெளிச்சம் இல்லாததால் மக்கள் அதிகக் கஷ்டப்பட்டார்கள். முக்கியமாகப் பகலும் இரவும் வேலை செய்த பெண்களே மிகவும் துன்புற்றனர். அரசருக்கும், அவர் பிரபுக்களுக்கும் தங்கள் வீடுகளில் போதுமான விளக்குகள் இருந்தன. இரவு நேரத்தில் வெளிச்சமின்மையால் தமது குடிகள், முக்கியமாய் பெண்கள் படும் அவதியை அறிந்த அரசர் அனுதாபங்கொண்டு அதற்கு ஒரு வழி கண்டுபிடிக்கத் தீர்மானித்தார். அரசரும், பிரபுக்களும் கூடி ஆலோசித்து, சிறு விளக்குகள் செய்யும் ஒரு இடம் ஏற்படுத்தி, ஒவ்வொரு வீட்டிலுமிருந்து ஒருவர் அங்கு அனுப்பப்படவேண்டுமென்றும், அங்கு விளக்கு செய்து, உபயோகிக்கும் விதத்தை அவர்கள் கற்றுக்கொண்டு, தங்கள் வீடுகளில் அதனை ஏற்றவேண்டுமென்றும் ஏற்பாடாயிற்று.

அந்தப் பயிற்சி இடத்திற்கு ஆண் பிள்ளைகளையே அனுப்பவேண்டுமென்று மந்திரிகள், வற்புறுத்தினார்கள். அரசருக்கு அந்த ஆலோசனை விருப்பமில்லாவிட்டாலும் அவர்களுக்கு உடன்பட்டார். இந்தச் செய்தி அறிந்த மக்கள் மகிழ்ந்து ஞானமும், அன்பும் பெற்ற அந்த அரசனை வாழ்த்தினார்கள்.

அதன்படி ஆண்பிள்ளைகள் சென்று விளக்கு செய்து உபயோகிக்கும் விதத்தைப்பற்றி கற்றுக்கொண்டு, ஆளுக்கொரு விளக்குடன் வந்து வீட்டை ஒளியாக்கினார்கள். ஆனால் அக்காலத்தில் தீக்குச்சி இல்லாததால், விளக்கு அணைந்தபோது அரண்மனைக்குச் சென்று அதனை ஏற்றிக் கொண்டுவந்தார்கள். ஒரு நாள் மன்னர் தமது புதிய திட்டம் எப்படியிருக்கிறதென்று அறியவிருப்பங்கொண்டு. இரவில் பல வீடுகளுக்குச் சென்றார்.

ஒரு வீட்டில் எதிர்பாராதபடி இருள் சூழ்ந்திருந்தது. அரசர் காரணமென்னவென்று விசாரித்தார். அவ்வீட்டிலிருந்த விளக்கை மகன் ஊருக்கு எடுத்துச் சென்றிருப்பதாகத் தாய் சொன்னாள். மேலும் பல இருள் சூழ்ந்

திருந்த வீடுகளில் இருந்தபெண்கள் தங்களுக்கு விளக்கை உபயோகிக்கவே தெரியாதென்றும், ஆண்கள் வெளியில் சென்றிருப்பதாகவும் கூறினார்கள். "அரசே! எங்கள் வீடுகளில் ஆண் பிள்ளைகளே இல்லை. அதனால் எங்கள் வீட்டில் ஒளி இருக்கக்கூடாதா? தயவுசெய்து எங்கள் வீட்டில் ஒளி ஏற்றும்", என்று சில வீடுகளில் கெஞ்சினார்கள்.

இதைக் கண்டு வெகுண்ட அரசர் தமது பிரபுக்களை வருவித்து, "நீங்கள் என்னை ஏமாற்றிவிட்டீர்கள்!" என்றார். பிரபுக்கள் பயந்து திடுக்கிட்டு மௌனமாயிருந்தார்கள்.

"நான் ஒவ்வொரு வீட்டிலும் ஒளி இருக்கவேண்டுமென்று சொல்லவில்லையா? நீங்கள் ஆண் பிள்ளைகளுக்கு மாத்திரம் விளக்கேற்றக் கற்பித்தால் போதுமென்று கூறினீர்கள். அதனாலேயே பல வீடுகளில் இன்னும் இருள் சூழ்ந்திருக்கிறது. ஆண் பிள்ளைகள் தங்கள் வேலைக்குச் செல்லும் பொழுது, விளக்கையும் தங்கள் உபயோகத்திற்கு எடுத்துச் செல்கின்றார்கள். அதனால் வீட்டுக்கு என்னபயன் ஏற்படும்? ஒரு பெண் தனக்கு மற்றொரு குடும்பத்தை ஏற்படுத்தும்வரை வீட்டிலேயே இருக்கிறாள். ஆகவே முதலில் பெண்களே விளக்கு செய்து அதனை ஏற்றப் படிக்கவேண்டும். அதன் மூலம் அவர்கள் தங்கள் வீடுகளை ஒளியாய் வைத்திருப்பதுடன் தாங்கள் மணமானபின் ஏற்படுத்தும் புதிய வீட்டையும் ஒளி மயமாக்குவார்கள். அப்போதுஎனது நாட்டின் எல்லாவீடுகளிலும் ஒளி பிரகாசிக்கும். புத்தியற்ற ஆலோசனைக்காரரே! துரிதமாய் சென்று நாட்டிலிருந்து பெண் பிள்ளைகள் இங்குவந்து விளக்கேற்றக் கற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யுங்கள்" என்றார் மன்னர்.

அரசர் மாளிகையில் திரண்ட பெண்கள் கூடி ஆண்களை விட துரிதமாகவும், நேர்த்தியாகவும் விளக்குச் செய்யவும், ஏற்றவும் படித்துக் கொண்டார்கள். அத்துடன் பெண்பிள்ளைகள் தங்கள் திறமையினால் அதனைத் தாய்களுக்கும் கற்றுக் கொடுத்தார்கள். அதன் பின்பு அந்நாட்டின் வீடுகளிலெல்லாம் ஒளி பிரகாசித்தது. மக்கள் மகிழ்ந்தார்கள். அரசர் களிப்படைந்தார். மன்னரின் மதிநுட்பத்தை நாட்டினர் போற்றிப் புகழ்ந்து கொண்டாடினார்கள்.

இவ்விடத்தில் சாக்ரடிஸ் தமது கதையை நிறுத்தி, "மாணவர்களே! நான் சொன்ன இக்கதையின் கருத்து என்ன?" என்று கேட்டார்.

மாணவர்கள் மௌனம் சாதித்தார்கள். "யோசித்துச் சொல்லுங்கள், அது கடினமானதல்ல" என்றார் சாக்ரடிஸ்.

ஒரு சிறுவன் "நாம் விளக்கை இரவானபின் அணைத்து விடக்கூடாது" என்றான்.

மாணவர்கள் கூறிய பதில் திருப்தியின்றி இருந்ததால், சாக்

ரடிஸ் ஆசிரியரை நோக்கி, "ஐயா! நீங்கள் உமது அபிப்பிராயத்தைக் கூறுங்கள்" என்றார்.

"கல்வியே ஒளி. பிள்ளைகளைப் பெற்று அவர்களை வளர்க்கும் பொறுப்பேற்கும் பெண்களுக்கு அந்தக் கல்வி இன்றியமையாதது. பெண்களே இல்லத்தின் 'ஜோதிகள்'. சிறு பெண்கள் பள்ளிக்குச் சென்று கல்வி ஒளியைப் பெற்றால் பிற்காலத்தில் அவர்கள் ஒளி நிரம்பிய குடும்பத்தை நிறுவி, அறிவுள்ள, சுத்தமுள்ள, ஆரோக்கியமுள்ள பிள்ளைகளை வளர்ப்பார்கள். பெண் கல்வி இல்லாத வீடுகளில் ஒளி ஏற்றப்படவில்லை. ஆகவே அதற்கு நாம் முயற்சி செய்து வரவேண்டும்" என்று அலங்காரமாகக் கூறினார் ஆசிரியர்.

"சபாஷ்! ஆசிரியரே, நேர்த்தியாய்க் கருத்தை விளக்கினீர். இக்கருத்தைச் சுலபமான முறையில் இச்சிறுவர்களுக்கு விளக்கி, அதனை இவர்கள் பெற்றோர்களுக்குத் தெரியப்படுத்துங்கள். வெகுசீக்கிரத்தில் பெண்பிள்ளைகளும் இங்குவருவதை நீங்கள் பார்ப்பீர்கள்" என்று சொல்லிவிட்டு சாக்ரடிஸ் விடைபெற்றுக் கொண்டார்.

உதிர்ந்த முத்துக்கள்

தொகுத்தது : ஆக்கூர். S. ஜோசப்

சுத்த அறிவே சிவம்.

— தாயுமானவர்.

தன்னைத்தான் செம்மைப் படுத்திக் கொள்வதில் செலவிடும் முயற்சியின் பயனே மனிதனுக்கு சந்தோஷத்தைத் தரக்கூடியது.

—அந்தவான் மருத்துவன்

பெறுதற் கரியவற்றைப் பெறவேண்டி அறிஞன் விடா முயற்சியைக் கைக் கொள்ளுகிறான்.

—லஓ-த்சே.

விடாமுயற்சியும் உறுதியும் உடையவருக்கு ஏதுவும் அரிதில்லை.

—லுன்-யூ,

காதல் கட்டை மீறி புரண்டோடும் இயல்புடையது ஒரு கனத்தில், வேரும் பாத்திரத்தையே உடைத்தெறிந்துவிட்டு கொந்தளித்து வழிந்தோடும் திராட்சை ரசம் போன்றது.

— தாகூர்.

உரிமைகளும் கடமைகளும்

(D. E. மாசிலாமணி, ஆசிரியர், ஆசிரியர் பயிற்சி மன்றம், விருதம்பட்டு)

★

ஒரு சமயம் சாக்ரடீஸ் ஞானி ஒரு கிராமத்திற்கு வந்து கொண்டிருக்கையில் தெருவின் மூலையில் பெரிய சந்தடியும், இரைச்சலும் கேட்டது. மிக உரத்த சப்தங்களும், கோபக் குரல்களும், அருவசிய தர்க்கங்களின் ஒலியும் கேட்டது. பல சோம்பேறிகள் அந்தப் பயனற்ற குழுவில் சேர்ந்து உற்சாகம் ஊட்டிக்கொண்டிருந்தனர்.

நாய்கள் சண்டையைக் கூட ஆவலுடன் பொழுது போக்குக்காகக் கவனிக்கும் சோம்பேறிகள் இருந்த கிராமத்திற்குள் வந்ததை எண்ணி சாக்ரடீஸ் வருந்தினார். சாக்ரடீஸ் அந்தக் கூட்டத்தை நெருங்கினவுடன், சுமார் நூறு பேர் அங்கு நிற்பதைக் கண்டார். அங்கிருந்த ஒரு கட்சித்தலைவன் கோபத்துடன் மற்றவர்களை நோக்கி "அது என்னுடைய உரிமை; ஆகையினால் நான் அதைச் செய்வேன்" என்று உரக்க சப்தமிட்டுக்கொண்டே, தன் கையிலிருந்த வார்சாட்டையை உபயோகிக்கும் பாவனையில் வைத்திருந்தான். "அது என்னுடைய உரிமை" என்று மறுபடியும் சொல்லிக் கொண்டு கூட்டத்தைச் சுற்றிப்பார்க்கையில் அங்கு சாக்ரடீஸ் வந்து நிற்பதைக் கண்டான்.

* * * *

சாக்ரடீஸ் :—"சபாஷ்! வாலிபனே, சரியாய்ச் சொன்னாய்; உன்னுடைய உரிமைகளுக்காக அப்படித்தான் வீர மனிதனைப் போல் எழுந்து நிற்க வேண்டும்.

(முதுகில் தட்டிக் கொடுக்கிறார்)

வாலிபன் :—"அது என்னுடைய உரிமை" (சாக்ரடீஸ் காதை மூடிக் கொள்ளுகிறார்.)

சாக்ரடீஸ் :—"உன் உரிமை உன்னுடையதே. ஆனால் கூச்சல் இடுவதால் என்ன பயன்? உனது உரிமை உண்மையானதால் நீ சாந்தமாகப் பேசலாமே."

வாலிபன் :—"அது என்னுடைய..............

சாக்ரடீஸ் :—அது சரி. உன்னுடைய உரிமை எது? எதைக் குறித்து இவ்வளவு அலட்டிக் கொள்ளுகிறாய்? நீ சொல்லு

கின்ற அனைத்தையும் நான் ஒப்புக் கொள்ளுகிறேன்; ஆனால் நீ உனது உரிமையைச்சாதிக்க விரும்பினால்அத்துடன் சம்பந்தப் பட்ட கடமைகளையும் நிறைவேற்ற ஆயத்தமாக இருக்க வேண் டும் என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். உனது கடமையை முடிக்க நீ விரும்பாவிட்டால், உனது உரிமைகளை நீ எதிர்பார்த்தலும் கூடாது. அது உனக்கு விளங்கு கின்றதா?

வாலிபன் :—நீங்கள் சொல்லுவது ஒன்றும் புரியவில்லை. என்னு டைய உரிமை என்னுடையதே. அத்துடன் அது முடிந்து விடுகின்றதே, பிறகு தர்க்கத்துக்கு இடமில்லையே!

சாக்ரடிஸ் :—வாலிபனே, நீ சொல்லுவது தவறு. நீ வாழ்க்கையில் ஆரம்ப விதியைத்தான் கற்றுக் கொண்டிருக்கிறாய்.

பலர் :—ஐயா! எங்களுக்குப் புதிர் போடவேண்டாம். சொன்னால் தெளிவாகச் சொல்லுங்கள்.

சாக்ரடிஸ் :—என்னை மன்னித்து விடுங்கள்; நான் சொன்னதை நீங்கள் புரிந்திருப்பீர்கள், என்று தவறாக எண்ணிக் கொண் டேன். இன்னும் நம் வாலிப சிநேகிதருக்குத் தெளிவாகச் சொல்லுகிறேன். எனக்குப் பல மிருகங்களின் புலாலை உண்ண வும், புகைப் பிடிக்கவும் உரிமை; உண்டு. ஆனால் நான் அவ்விதம் செய்யும் போது எனது அயலகத்தாரின் மனதைப் புண்படுத் தாமல் நடந்துகொள்ள வேண்டும் அல்லவா?

வாலிபன் :—அது உண்மைதான். ஆனால் அது எப்போதும் நடக்கக் கூடிய காரியம் அல்லவே!

சாக்ரடிஸ் :—என்னுடைய மோட்டாரை அதிக வேகத்தில் ஓட்டு வது எனது உரிமை. ஆனால் அதனால் பிறர் காயப்படாமலும், பயப்படாமலும் இருக்கும்படி பார்ப்பது எனது கடமை. எத்தகைய பாஷையையும் பயன் படுத்துவது என்னுடைய உரிமைதான்; ஆனால் பேசும் விதத்தில் பிறர் மனதைப் புண் படுத்தாமல் இருப்பது என்னுடைய கடமை. பெண்களுக்கும், சிறு பிள்ளைகளுக்கும் உதவி செய்வது எனது உரிமை; ஆனால் அவர்களுக்குத் தீங்கு செய்யாமல் காப்பது என் கடமை அல்லவா?

ஆசிரியர் :—(கூட்டத்தில் வந்து கலந்து) ஐயா! நீங்கள் சொல்லு வது எங்கள் அனைவருக்கும் நன்றாக விளங்குகிறது.

சாக்ரடிஸ் :—மிக்க சந்தோஷம்! ஆனால் நான் மேலும் சில முக்கிய கடமைகளைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன்.

பலர் :—சாக்ரடீஸ் பெரியாரே! நன்றாக, மேலும் மேலும் பேசுங்கள். நாங்கள் அதை ஆவலுடன் கேட்போம்.

சாக்ரடீஸ்:—நமக்கு விருப்பமான இடத்தில் மல ஜலம் கழிப்பதும், குப்பை கொட்டுவதும் கூட, நமது உரிமையென்று நினைக்கலாம்.

சிலர் :—கடமை செய்ய அங்கு ஒன்று மில்லையே!

சாக்ரடீஸ் :—நான் அவ்விதம் செய்வதால் துர் நாற்றம், மற்றவர்களைத் துன்புறுத்தாமலும்சிறுவர்கள் விளையாடுமிடத்தை அசுத்தம் செய்யாமலும், பிணி, கொசுபரவ ஏது வில்லாமலும் இருக்கும்படி பார்த்துக்கொள்ளுவது நமது கடமை அல்லவா?

ஜனங்கள்:—ஐயோ! நீங்கள் சொல்லுவது முடியாத காரியமாக இருக்கிறதே!

சாக்ரடீஸ் :—நான் சொல்வது உங்களால் பின்பற்றக்கூடியதே. மேலும், நீங்கள் ஆரோக்கியமான, நாகரீகமான நல் வாழ்க்கையை நடத்த விரும்பினால் நான் சொல்லுவது இன்றியமையாதது என்பதை மறந்து விடாதீர்கள்.

சிலர்:—நாங்கள் நீர் சொல்லுகின்ற எல்லாக்கடமைகளையும எபபடிப பின்பற்றுவது? உரிமைகளைவிட கடமைகளையே பெரிதாகச் சொல்லுகிறீரே?

சாக்ரடீஸ் :—கிராமத்தினராகிய உங்களுக்கு முக்கியகடமை, குழி, கழிவிடம், உபயோகிப்பதே.

மக்கள் :—குழி; குழி; குழி! இதைப்பற்றிச் சலியாமல் எங்கள் மேல் பழியாய்ச் சுமத்துகிறீரே!

சாக்ரடீஸ் :—என்னுடைய மோப்பமும், கண்களும், அத்துடன் சுக்களும், நீங்கள் இன்னும் கண்ட இடங்களில் மல ஜலம் கழிக்கிறீர்கள் என்பதைநன்றாக நினைவூட்டுகின்றன.சுகாதார ஆரம்ப விதியையே, அநுசரிக்காவிடில் நீங்கள் எப்படி சுகமாக வாழ முடியும்?

ஆசிரியர் :—சாக்ரடீஸ் பெரியாரே; எங்கள் பாடசாலையில் நீங்கள் சொல்லிய கழி விடங்கள் வைத்திருக்கின்றோம்; எங்கள் ஜில்லா முழுவதிலும் உமது போதனையினால் அத்தகைய ஏற்பாடுகளையே பின்பற்றி வருகின்றனர்.

சாக்ரடிஸ் :—அப்படியானுல் உங்கள் ஜில்லாதான் சுகாதார விதிகளை அநுசரிப்பதில் கிராமத்தினருக்கு முன்மாதிரியாக இருக்கின்றது. நான் உங்கள் கடமைகளைப்பற்றி மேலும் பேசலாமா ?

ஜனங்கள் :—ஐயா ! உங்களுக்கு விருப்பமானுல் மேலும் பேசலாம்.

சாக்ரடிஸ் :—நம்முடைய குடும்ப மகிழ்ச்சிக் கொண்டாட்டத்தில் இரவு முழுவதும் வாணவேடிக்கைகள் காட்டுவதும்; சங்கீதம், பாண்டு வாத்தியங்கள் வாசிப்பதும் நமது உரிமையே. ஆனுல் நாம் அப்படி செய்கையில், அயலகத்தாரின், குழந்தைகள் பிணியாளிகள், இவர்கள் தூக்கத்தைக் கெடுக்காமல் இருக்க வேண்டும் அல்லவா ? அதுவும் நமது கடமையே.

சிலர் :—ஐயா, நீங்கள் சொல்லுவது மிகவும் கஷ்டமான காரியமாக அல்லவா இருக்கிறது ? அப்படியானுல் விழா இரவு, இத்தகைய மகிழ்ச்சிக் கொண்டாட்டம் வேண்டாம் என்கிறீரா?

சாக்ரடிஸ் :—நீங்கள் செய்யும் காரியங்கள் பிறர்க்கு இடைஞ்சல் ஏற்படுவது போல் தோன்றினுல், சரியான நேரத்தில் அதை நிறுத்திவிட்டு மறுநாள் விழாவைத் தொடர்ந்து நடத்தலாம்.

ஒருவர் :—அப்படியானுல் உங்களுக்கு மாவு அரைக்கும் "லொடலொடா" இயந்திரங்கள் கூட பிடிக்காது போலும் !

சாக்ரடிஸ் :—அது கூட பொது ஜனங்களுக்கு இடைஞ்சல் கொடுக்கக் கூடியதே. சில மாவு மில்கள் பாடசாலைக்கு வெகு அருகில் இருந்து கஷ்டம் விளைவிக்கின்றன. ஒருநாள் அதைப்பற்றி மாவுமில் எஜமானனிடம் சொன்னபோது, அவர் என் மேல் கோபங் கொண்டு வருந்தினர். பாடசாலை அருகில் மில் இருந்தால் பிள்ளைகள் எப்படிப்பாடம் கற்கமுடியும்? ஆசிரியர் எப்படிப் போதிக்க முடியும் ?

வாலிபர்கள் :—சாக்ரடிஸ் பெரியாரே ! உங்கள் அறிவுள்ள உபதேசம் இன்று எங்களுக்குக் கிடைத்தது எங்கள் அதிர்ஷ்டமே. மேலும் ஏதாவது பேச விரும்பினுல் சொல்லுங்கள்.

சாக்ரடிஸ் :—இறுதியாகச் சுருங்கச் சொல்லி விளங்கவைக்கிறேன். எனது மிஞ்சிய பணத்தை எனது இஷ்டப்படி செய்ய எனக்கு உரிமை உண்டு; ஆனுல் சிறிதளவு பணத்தையாவது தர்மசாலை; வைத்தியசாலை, பாடசாலை இவற்றிற்காகச் செலவிடுவது எனது கடமை எனலாம். நீங்கள் ஒற்றுமையாக, சந்தோஷமாகக் கூடி வாழ விரும்பினுல் உங்கள் செய்கைகள் எப்படிப் பிறரை பாதிக்கின்றன என்பதையும் நீங்கள் உணரவேண்டும். உங்கள் உரி

மைகள் அனைத்தும் பிறரின் உரிமைகளால் அளவிடப்பட்டே யிருக்கின்றன! ஆகவே உங்கள் கடமைகளையும் உணர்ந்து, உரிமையுடன் வாழுங்கள்.

மக்கள் :—பெரியாரே! உமக்கு வணக்கம். உமது உபதேசத்தை மறக்கவே மாட்டோம். எங்கள் கடமைகளை இப்போதுதான் உணர்ந்தோம்.

வேண்டாமே ஹைட்ரஜன் குண்டு சோதனை

நோபல் பரிசுபெற்ற விஞ்ஞானி எச்சரிக்கை

புல் பூண்டும் அற்றுப் போகுமாம்!

உலகத்தில் மனித, பிராணி, தாவர வர்க்கத்தின் அபாய அறிவிப்பு நிலை ஏற்கனவே ஏற்பட்டு விட்டதால் இனியும் ஹைட்ரஜன் குண்டு சோதனைகளில் ஈடுபடுவது அசட்டுத் தைரியமே என்று நோபல் பரிசு பெற்ற பிரெஞ்சு விஞ்ஞானியான லூயி டிபிரோகைல் இளவரசர் கூறியிருக்கிறார். தவிர்க்க முடியாத கீழ்க்கண்ட விளைவுகள் ஏற்படும் என அவர் தெரிவித்தார்.

(1) ஹைட்ரஜன் குண்டு வெடிப்பதால் எழும் எரி அமில வாயு ஆகாயத்தில் சூழ்ந்து, மழை நீரின் அமிலத் தன்மையைக் கரைத்துக் குறைத்து, அதன் விளைவாகத் தாவரவர்க்கத்தையும், அவற்றின் உற்பத்தி சக்தியையும் அடியோடு சின்னாபின்னமாக்கும்.

(2) வெடியினால் சூரிய கிரணங்களில் ஒரு பகுதி தடுக்கப்பட்டு அதனால் கடுமழை பொழிவதும், சீதோஷ்ண நிலை, ஆவியாக மாறுதல் இவற்றில் மாறுதல் ஏற்படுத்தலாம், காற்று திசையும் மாறக் கூடும்.

(3) எண்ணவொண்ணாத சிற்சிறு மின் அலைத் துகள்கள், மிகவும் ஊடுருவிப் பாயவல்ல காமா கிரணங்களை உண்டாக்கும். இவை பல ஆண்டுகள் இயங்கக்கூடியவை.

(4) 2000 ரேடியக் கதிர் ஆராய்ச்சிக்காரர்கள் அவர்களின் குழந்தைகளிடையே பரீட்சித்துப் பார்த்ததில், ரேடியக் கதிர் தாக்குதலால் ஜனன விபத்துகள் அதிகமாவதுடன் பிறக்கும் குழந்தைகளிலும் அங்கஹீனம் அதிகமாகக் காணப்படுவதும் தெரிகிறது.

ஆரம்பக் கல்வி சீர்திருத்தம்

சிபார்சுகள் கூற நிபுணர் கமிட்டி நியமனம்

அரசியல் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள காலத்திற்குள் கட்டாய ஆரம்பக் கல்வி அமுலுக்கு வர வேண்டுமென்றிருப்பதையும் மனதில் கொண்டு எல்லா ஆரம்பக் கல்வித் திட்டங்களையும் பரிசீலனை செய்து ராஜ்யத்திற்கேற்ற சிறந்தவொரு திட்டத்தை இக் கமிட்டி தயாரிக்கும். இதன் திட்டம் அடுத்துவரும் பள்ளிக்கூடங்கள் திறக்கப்படும்போது அமுலாக்குவதற்கு ஏற்றவாறு கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கமிட்டியின் அங்கத்தினர்கள் வருமாறு:

டாக்டர் ஆர். எம். அழகப்ப செட்டியார் (தலைவர்).

திரு என்.டி. சுந்தரவடிவேலு, சென்னை கல்வி இலாகா டைரக்டர்.

திரு எஸ். மீனாட்சிசுந்தர முதலியார், கலைமகள் கல்வி நிலையம், ஈரோடு.

திரு கே. அருணாசலம், பி.கே.என். ஸ்ரீ ராமகிருஷ்ண வித்யாலயா, கோயமுத்தூர்.

திரு எம். அருணாசலம், பி.கே. என். ஹைஸ்கூல், திருமங்கலம்.

திரு வி. எஸ். கோபாலகிருஷ்ணய்யர், எம். ஸி. டி. ஹைஸ்கூல், சென்னை,

ஆரம்பக் கல்வித் திட்டம் சம்பந்தமான சகல பிரச்னைகளையும் கமிட்டி ஆராய்ந்து சிபார்சு செய்யும். அரசியல் சட்ட ஷரத்துகளையும் அதில் குறிப்பிட்ட காலத்திற்குள் ஆரம்பக் கல்வி இலவசமாகவும் கட்டாயமாகவும் இருக்க வேண்டுமென்பதையும் மனதில் கொண்டு கமிட்டி அதன் சிபார்சுகளைத் தெரிவிக்கும். கல்வியின் தரத்தை அபிவிருத்தி செய்வதையும் கமிட்டி கவனிக்கும். நிதி நிலைமையையும், பிற்பட்ட அல்லது ஏழைக் குழந்தைகள் எல்லோரையும் பள்ளிக்கூடத்திற்குக் கொண்டுவருவது பற்றியும் கமிட்டி கவனித்து சிபார்சு கூறும்.

ஆரம்பப் பள்ளிக்கூடங்களை ஆதாரப் பள்ளிக்கூடங்களாக மாற்றுவது பற்றியும் கமிட்டி யோசிக்கும்.

கமிட்டி நியமனம் பற்றிக் கல்வி மந்திரி செய்தி நிருபர்களிடம் பேசிக்கொண்டிருக்கையில் கமிட்டியின் வேலை மிகவும் விரிவானதென்றும் அதைக் கட்டுப்படுத்தவில்லையென்றும் கூறினார்.

ராஜாஜி கொண்டுவந்த ஆரம்பக் கல்வித் திட்டம் கவனிக்கப்படுமா? என்று கேட்டதற்கு, "கமிட்டி எந்தத் திட்டத்தை வேண்டுமானாலும் கவனிக்கலாம்

மக்கள் தொகை பெருகுவதற் கேற்றபடி உணவு உற்பத்தி பெருகவில்லை. மேலும், அண் மையில்தான் பல நாடுகள் சுயாட்சி பெற்றன. அங்கு மக் களின் வாழ்க்கைத் தரம் உயர, தொழில் வளம் பெருக முயற்சிக் கப்படுகிறது. அதற்கேற்ற ஆதார சக்தி வேண்டும்.

அந்நிய ஆதிக்கம் அப்பகுதி களிலிருக்கும் போது, அடி மைக்கும், துயரத்திற்கும் ஆளும் வர்க்கத்தின் மீது குற் றஞ்சாட்டுவது சுலபம். சுதந் திர ஆட்சியின் நிலைமை வேறு. பட்டினியும், அறியாமையும் விலகாமல், சுதந்திரம் பெறு வதில், மக்களுடைய அதிருப் தியே மிஞ்சுகிறது.

(நம் நாடு)

★★★

ஞாயிற்றுக் கிழமை (28–11–54) அன்று வாலாஜாபாத் இந்துமத பாடசாலை ஸயன்ஸ் பிளாக்கை கல்வி இலாகா டைரெக்டர் திரு. என். டி. சுந்தரவடிவேலு திறந்து வைத் தார். படத்தில் திரு. என். டி. சுந்தரவடிவேலு, விழாவுக்குத் தலைமை வகித்த ஸ்தலஸ்தாபனங்கள் இன்ஸ்பெக்டர் திரு. ஜே. சிவானந்தம், சட்ட இலாக்கா உதவி காரியதரிசி திரு. சி. டி. நடராசன் ஆகியவர்களைக் காணலாம்.

ஜாதி வேற்றுமையை மாணவர்களிடம் புகுத்த வேண்டாம்

'ஒன்றே குலம்; ஒருவனே தெய்வம்' என்ற மனப்பான்மை வளர வேண்டும்

சேலம் ஆரம்ப ஆசிரியர்களுக்குக் கல்வி டைரக்டர் நல்லுரை

இராசிபுரம் தாலுகா ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் முதலாவது மாநாட்டைத் திறந்து வைக்கையில் சென்னை ராஜ்ய கல்வி இலாகா டைரக்டர் திரு என். டி. சுந்தரவடிவேலு கூறியதாவது :—

நான் டைரெக்டராகப் புதியவனே தவிர ஒரே துறையிலுள்ள பழைய நண்பன். கல்வித்துறையில் நானும் ஒரு வாத்தியார். சாத்தியமான உதவி செய்ய முடியும். உங்கள் துயரம் எனக்குத் தெரியும். சுதந்திரம் வந்த பின்னர் அதிகம் செய்ய முடியும் என்று நம்புகிறேன். கண்டிப்பாக வாழ்க்கைத்தரம் உயரும். நாடு பூராவும் முன்னேற இருக்கிறது.

குறைவாக எண்ணவேண்டாம்

இன்றைய நிலையில் 100—ல் 15 பேர் தான்படித்ததாகக் கணக்கு. உண்மையாக நன்கு படித்தவர்கள் இன்னும் குறைந்த விகிதத்தினர். நாட்டுக்குப் பயன்பட வாழ வேண்டும். குறைந்த சம்பளம் பெறுவதால் குறைந்த வேலை செய்யலாமா என்று நினைக்காதீர்கள். அதற்காக சின்ன மனிதர்களாக ஆகிவிடாதீர்கள். முழு மனிதனுகப் பயனுள்ள வாழ்வு வாழுங்கள். அரை மனிதன் கால் மனிதனுக ஆகிவிடாதீர்கள். ஒன்றும் கிடைக்காதவன் ஆசிரியராக வந்திருக்கலாம். அதனுல் அது தாழ்ந்ததாகி விடாது. பலவற்றிற்கு முயற்சி செய்திருக்கலாம். நம் தொழில் பற்றி நாம் இறுமாப்புக் கொள்ளலாம். அது ஒன்றும் குறைந்ததில்லை. ஒரு ஆசிரியர் தன் சர்வீஸில் 1000 குழந்தைகளுக்காவது பயிற்சியளிக்கின்றனர். பல ஆசிரியர்கள் வறுமைப்பட்டிருந்தாலும் நல்ல மனம் படைத்திருக்கின்றனர். எனக்கு நேரில் அனுபவம் உண்டு. சம்பளம் குறை என்று கிடைத்துள்ள வாய்ப்பைக்குறைவாக எண்ணுதீர்கள். சம்பள உயர்வு கேளுங்கள். போராடுங்கள்.

இங்கிலாந்தில் ஆரம்ப ஆசிரியருக்குக்கூட பாட திட்டம் இல்லை. ஆசிரியர்களை அவ்வளவு நம்புகிறார்கள். பிள்ளைகள் பக்குவ

நிலையை ஒட்டி சாத்தியமான அளவு போதிக்க நம்பிவிட்டிருக்கிறார்கள். ஆசிரியர்களும் அதற்குப் பாத்திரமாக நம்பிக்கையுடன் நடந்து கொண்டுள்ளனர். அங்கும் ஆசிரியர்கள் நிலைமை மற்ற தொழில்களில் கிடைக்கும் ஊதியம் கிடைக்கவில்லை. முன்பு கிடைத்ததைவிட தற்பொழுது அதிகம் கிடைப்பது உண்மை. தன்மான உணர்ச்சி மூலம் அவர்கள் பொறுப்பு குறையவில்லை. ஆகவே ஆங்கிலேயர்களால் முடிந்தது முயற்சி செய்தால் நமக்கு ஏன் முடியாது. முடியும் அவர்களையும் மிஞ்சலாம் என்றுதான் நினைக்கிறேன்.

அந்த உணர்ச்சி உங்களிடம் வந்த காலம் உங்களை ஒருவரும் அலட்சியப்படுத்த முடியாது. அகௌரவப்படுத்த முடியாது. தவறும் குழந்தைகளை அடிக்காமல் திட்டாமல் தன்னம்பிக்கை ஊட்டி, திருத்த வேண்டும். பள்ளிக்கூடம் வெட்கப்படாமல் முயற்சிக்கும் கூடம் ஆகும்.

வேற்றுமையைப் புகுத்தவேண்டாம்

தொழில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கூட, உத்தியோகத்திற்குத் தான் விண்ணப்பம் போடுகிறாரே தவிர தன்னம்பிக்கை கொண்டு தொழில் நடத்த முன்வருவதில்லை. அவ்விதமே குழந்தைகள் மனச்சோர்வடையாதபடி வளர்க்க வேண்டும். மனம் தூய்மைப்பட வேண்டும். செய்கையிலும் மாற்றம் காட்ட வேண்டும். வேற்றுமை சக்திகள் அகல வேண்டும். ஜாதித் தொல்லைகளும் போக வேண்டும். யார் உங்களைத் தூண்டினாலும் நீங்கள் பொறுமையுடன் வகுப்புகளில் ஜாதி வேற்றுமை மனப்பான்மையை மாணவர்களிடம் புகுத்தாதீர்கள். ஒன்றே குலம் ஒருவனே தெய்வம் என்ற மனப்பான்மை வளரப் பாடுபடுங்கள். நான், நீ என்ற மனப்பான்மை போய், நாம் என்ற மனப்பான்மை வளர வேண்டும். கல்வியில் குற்றமில்லை. முறைகளிலே தான் என்ற மனப்பான்மை வந்துவிட்டது. போட்டி நல்லது தான். ஆனால் எல்லா போட்டியும் நன்மை ஆகாது. கூட்டுறவும் நாட்டு நலமும் வளரவேண்டும். நாட்டு மக்களை நல்ல முறையில் வளர்ப்பது நம் கையில்தான் உள்ளது.

இங்கிலாந்தில் நிர்ப்பயமும் சுதந்தரமும் பூர்ணமாய் உள்ளன. யார் எது கூறினாலும் சகிக்கும் பண்பு இருக்கிறது. நாணயமும், நம்பிக்கையும் பூரணமாய் உள்ளன. புதிய தலைமுறை நாணயத்திலே நல்ல முறையில் வளர நீங்கள் பாடுபட வேண்டும். நமக்குள்ளிருக்கும் அவநம்பிக்கை போக வேண்டும். அசுத்தம் செய்யாமல் சுத்தமாக இருக்கும் பண்பு வளர வேண்டும். தனிச் சுத்தம், ஊர் சுத்தம், நகர் சுத்தம் வளர்ச்சி நீங்கள் போதிக்க வேண்டும். நல்ல பழக்கம் வளர்க்கப் பாடுபடுங்கள். அறிவு, திறமை, ஆண்மை தருவது மட்டும் அல்ல.

நல்ல பழக்க வழக்கங்கள் மாண வர்களிடையே ஏற்படுத்த வேண் டும் என்றும் கங்கணம் கட்டிக் கொள்ளுங்கள்.

தீர்மானங்கள்

மாநாட்டில் பின்வரும் தீர்மா னங்கள் நிறைவேற்றப்பட்டன :—

சமூகம் தனது பிள்ளைகளுக் குக் கல்விப் பயிற்சி யளிக்குமாறு ஆசிரியர்களிடம் மகத்தான பொறுப்பை ஒப்படைப்பதுபற்றி சிறப்பான கடமை உண்டு. குழந்தைகளின் தனிச் சிறப்பு களை கவனித்துத் தனித் திறன் களை வளர்த்து எதிர்கால மனித னுக்குரிய நெறியுணர்வை இடை விடாது உருப்படுத்தும் விஷ யத்தை நினைவில் வைத்துக் குழந்தைகளின் கல்விப் பயிற் சியை நடத்துதல், பொதுச் சொத்துக்களைப் பாதுகாத்தல், நாட்டின்பால் அன்பு செலுத்தல், சகோதரத்வ உணர்ச்சி, மக்கள் பால் நட்புறவு ஆகியவற்றின் அடிப்படையில் குழந்தைகளுக் குக் கல்விப் பயிற்சி அளித்தல் ஆகியவை, ஆசிரியர்களின் முக் கியமான கடமைகள் என்பதை உணர்ந்து அவற்றைப் பொறுப் புணர்ச்சியுடன் ஆசிரிய சமூகம் நிறைவேற்றும் என இம்மாநாடு உறுதி கூறுகிறது.

மற்ற தீர்மானங்களின் சாராம் சமாவது :—

ஆசிரியர் கல்வி போதனை, தொழில் பாடம்பற்றி மாறுதல் களுக்கு ஏற்க போதனுமுறைபி லும் பயிற்சி தர தொழில் திறமை வாய்ந்த ஆலோசனைக் குழு அமைக்குமாறு சர்க்காரைக் கோரப்பட்டது. கட்டாயக் கல்வியைப் பரப்ப சட்டம் இயற்றி சர்க்காரே ஆவன செய்ய வேண்டுமாயும், மாணவர் சேர்க் கும் பொறுப்பை ஆசிரியர்களி டம் சுமத்தக்கூடாதென்றும் கோரப்பட்டது. மத்திய சம்பள கமிஷன் சிபார்சுப்படி அடிப் படை சம்பளம், பஞ்சப்படி, வீட்டு வாடக அலவன்ஸ், சம்பள உயர்வு முதலியவை அளிக்கு மாறும் ஒரே யோக்கியதாம்சம், அளவு வேலை, கல்வி தரம் உள்ள ஆசிரியர்களுக்கு ஒரே சம்பளம் லீவ் முதலிய வசதிகள் அளிக்கு மாறு கோரப்பட்டது.

ஆரம்பக் கல்விபற்றிய எல்லா வித ஆலோசனைக் குழுக்களிலும் ஆரம்ப ஆசிரியர்களுக்கு பிரதி நிதித்துவம் அளிக்குமாறு கோரப்பட்டது. ஆரம்பக் கல்வி பாடப் புத்தகங்கள்பற்றி ராஜ்ய சர்க்கரே பொறுப்பேற்று வெளி யிடுமாறும் ராஜ்யம் பூராவும் ஒரே மாதிரி பாட புத்தகங்கள் இருக்க வேண்டுமாயும் கோரப் பட்டது.

ஆரம்பப் பாடசாலையில் 5-வது பாஸ் செய்த பிறகு, ஹைஸ்கூ லில் நுழைய தேர்வு வைக்காமல் சேர்க்க வேண்டுமாய் கோரப்பட் டது. கிராம தபாலாபீஸ்களில் போஸ்டுமாஸ்டர்களாக நியமிக்க ஆரம்ப ஆசிரியர்களுக்கு முதல் சலுகை அளிக்க வேண்டுமாய் கோரப்பட்டது. ஆசிரியர்களுக்கு

ரிடையராகும் வயதை 55லிருந்து 60 ஆக உயர்த்த வேண்டுமாய் கோரப்பட்டது. ஆசிரியர்கள் குழந்தைகளுக்கு சர்க்கார் உத்தியோகங்களில் முதல் சலுகை அளிக்கப்படவேண்டும். சேலம் ஜில்லாவில் தனித் தனியாக ஊமை, செவிடு, குருடு மாணவர்கள் பாடசாலைகளைத் திறந்து நடத்த வேண்டுமாய் கோரப்பட்டது. புதிதாக வந்துள்ள ஆசிரியர்களுக்கும் 1933—க்கு முன் வந்தவர்களைப் போலுள்ள உரிமைகள் சலுகைகள் வழங்க வேண்டும். பிராவிடண்ட் பண்டு போனஸ் தொகையை மானேஜ்மெண்டார் சம்பளத்தில் ரூபாய்க்கு ஓரணா என்றிருப்பதை 2 அணாவாக உயர்த்த கோரப்பட்டது. எயிடட் பாடசாலை ஆசிரியர்களுக்கு மாதந்தோறும் 10—ந் தேதிக்குள் சம்பளம் கிடைக்குமாறு ஏற்பாடு செய்யுமாறு கோரப்பட்டது. வேறு மானேஜ்மெண்டுக்குப் போகும் ஆசிரியர்களுக்கு முன் வாங்கிய சம்பளம் தொடர்ச்சியாக சர்விஸ் பாதிக்கப்படாமலும் கிடைக்க வழி ஏற்படவேண்டுமாய்க் கோரப்பட்டது. ஆரம்ப ஆசிரியர்கள் குழந்தைகளுக்கு கல்லூரிப் படிப்புவரை இலவசக் கல்வி சலுகை அளிக்கப்படவேண்டும். ஆரம்ப ஆண்டு உயர்தர ஆரம்ப பாடசாலை தலைமை ஆசிரியர்களுக்கும் ஹைஸ்கூல்களைப் போல் விசேஷச் சம்பளமும், சம்பள உயர்வும் அளிக்கப்படவேண்டும். 5 மைலுக்கப்பாலிருந்து ஆசிரிய சங்கக் கூட்டங்களுக்கு வரும் ஆசிரியர்களுக்குப் பிரயாண செலவு அளிக்கவேண்டும்.

திரு கே. செல்லப்பன் வந்தனோபசாரம் கூற கூட்டம் முடிவடைந்தது.

சு. மி

உதிர்ந்த முத்துக்கள்

தலையெழுத்து! குடிவெறியில் நாம் என்ன செய்கிறோம் என்பது நமக்கே புரிவதில்லை. தெய்வச் செயலும் இப்படித்தானே இருக்கிறது? அது எப்போதும் குணங்களைப் பார்த்து அவற்றிற்குத் தக்கபடி தலையெழுத்தை வரைவதில்லை; தெய்வமும் குடிகாரனைப் போன்றதே.

—வி. ச. காண்டேகர்.

வயிற்றுப் பிழைப்புக்காகக் கிளிபோல் சொன்னதைச் செய்யும் பிராம்மணன் பூதேவனும்! பிரத்தியட்சமாகப் பூமிக்குத் தொண்டு செய்து அன்ன பூரணியை அவதாரமெடுக்கச் செய்யும் பண்ணையாள் மட்டும் குடியானவனும். இப்படிச் செய்யும்மதம் ஓர் அழகிய பிணம். அதை உடனே அகற்றாவிட்டால் அதன் துர்நாற்றம் மக்களுக்கு பெருங்கேடுண்டாக்கும்.

—வி. ச. காண்டேகர்.

கமிஷனரின் நடவடிக்கைகள் ரத்து

★

கார்ப்பொரேஷன் ஆரம்பப் பள்ளிக்கூடமொன்றின் தலைமை ஆசிரியரான திரு டி. ராமானுஜம் தாக்கல் செய்த மனுவொன்றை ஹைகோர்ட் நீதிபதி திரு பி. ராஜகோபாலன் இன்று அனுமதித்து, அவரை வேலையிலிருந்து நீக்கி கார்ப்பொரேஷன் கமிஷனர் பிறப்பித்திருந்த உத்தரவை ரத்து செய்தார். தலைமை ஆசிரியரைத் திரும்ப வேலைக்கெடுத்துக் கொள்ள வேண்டுமென்றும், ஆனால் குறைக்கப்பட்ட சம்பளத்தில் அவரை எடுத்துக்கொண்டால் போதுமென்றும், நீதிபதி தமது தீர்ப்பில் கூறினார்.

தீர்ப்பு விவரம்

வழக்கின் விவரங்களை எடுத்துரைத்து நீதிபதி தீர்ப்புக் கூறியதாவது :—

மனுதாராகிய திரு டி. ராமானுஜம் கார்ப்பொரேஷன் ஆரம்பப் பள்ளிக்கூடமொன்றில் 1950-ம் வருஷத்தில் தலைமை ஆசிரியராக வேலை பார்த்தார். 1950 ஆகஸ்டு 23-ம் தேதி அவர்மீது இரண்டு குற்றங்கள் சாட்டப்பட்டு அவற்றிற்கு சமாதானம் கூறும்படி கோரப்பட்டார். தமது சமாதானத்தைக் கூறி அவர் சில தஸ்தாவேஜுகளின் பிரதிகளைக் கேட்டார். அப்படிப் பிரதிகளை அவர் கேட்டது அதிகாரிகளுக்குக்கீழ்ப் படிந்து நடக்காத செயலாகும் என்று கூறி அவரது சம்பளத்தை அதிகாரிகள் 80 ரூபாயிலிருந்து 76 ரூபாய்க்குக் குறைத்தனர். அவர் வேறிடத்திற்கு மாற்றப்பட்டார். உடனே மனுதார் ரிடையர் ஆக அனுமதி கோரி ராஜாவுக்கு மனுப்போட்டார். 1951 மார்ச் 14-ம் தேதி மேற்கொண்டு அவர்மீது 4 குற்றங்கள் சாட்டப்பட்டு அவற்றிற்கு உடனே சமாதானம் கூற வேண்டுமென்று கூறப்பட்டார். அவர் அவற்றிற்குச் சமாதானம் கூறி மேற்கொண்டு சந்தர்ப்பமளிக்க வேண்டுமென்று கோரினார். அதன் பேரில் அவரது சம்பளத்தை 76 ரூபாயிலிருந்து 70 ஆக மேற்கொண்டு குறைத்து 1951 நவம்பர் 13-ம் தேதி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அத்துடன் அவர் கீழ்த்தர (அதாவது ஒரு சாதாரண ஆசிரியர்) உத்யோகத்திற்கும் மாற்றப்பட்டார். இந்த உத்தரவை எதிர்த்து மனுதார் நிரந்தரக் கமிட்டிக்கு அப்பீல் செய்தார். ஆனால் அப்பீல் தள்ளப்பட்டது.

அதன்பேரில், அரசியல் சட்டத்தின் 226-வது ஷரத்தின்கீழ் ஹைகோர்ட்டுக்கு மனுச் செய்துகொள்ள 1952 செப்டம்பர் 9-ம் தேதி அவர் கார்ப்பொரேஷன் கமிஷனரை அனுமதி கோரினார். இப்படி அனுமதி கோரி அவர் போட்ட மனுவை வாபஸ் பெற்றுக் கொள்ளும்படி 1952 அக்டோபர் 25-ம் தேதி கமிஷனர்

அவருக்கு உத்தரவு பிறப்பித்தார். ஆனால், மனுதார் அம்மனுவை வாபஸ்பெற்றுக் கொள்ளவில்லை. அதன்பேரில் அவர் கீழ்ப்படிந்து நடந்துகொள்ளவில்லை என்ற குற்றத்தை அவர் மீது சாட்டி அவர் சஸ்பெண்டு செய்யப்பட்டார்.

1952 டிஸம்பர் 4-ம் தேதி யன்று மனுதார், தம்மீது எழுத்து மூலமாக சமாதானத்தைச் சமர்ப்பித்தார். 1952 டிஸம்பர் 28-ம் தேதி அவரை வேலையிலிருந்து நீக்கிவிடும்படி கமிஷனர் உத்தரவு போட்டார். மனுதார் நிரந்தரக் கமிட்டிக்கு அப்பீல் செய்துகொண்டார். நிரந்தரக் கமிட்டி அந்த உத்தரவில் ஒரு திருத்தம் செய்தது. மனுதாரை மீண்டும் வேலைக் கெடுத்துக் கொள்ள வேண்டுமென்றும், ஆனால் அவரது சம்பளத்தை 70 ரூபாயிலிருந்து 65 ரூபாய்க்குக் குறைத்துவிட வேண்டுமென்றும், கமிட்டி உத்தரவிட்டது. அவர் வேலையிலில்லாதகாலத்தை சம்பளமில்லாத ரஜாவாகக் கருத வேண்டுமென்று, கமிட்டி உத்தரவிட்டது.

1952 டிசம்பர் 28-ம் தேதி கமிஷனர் பிறப்பித்த உத்தரவு, அப்பீலில் 1953 ஜுன் 6-ம் தேதி நிரந்தரக் கமிட்டி பிறப்பித்த உத்தரவு ஆகியவை செய்யத்தக்கவையாஎன்பதே பிரச்னை. அரசியல் சட்டத்தின் 226வது ஷரத்தின்கீழ் இந்தக் கோர்ட்டில் (ஹைகோர்ட்டில்) மனு ச்செய்து கொள்வதற்கு அனுமதிதரவேண்டுமென்று மனுதார் கோரியதை வாபஸ்பெற வேண்டுமென்று கமிஷனர் உத்தரவுபிறப்பித்தார். அது சட்ட பூர்வமான உத்தரவாகவிருந்தால் அதற்குக் கீழ்ப்படிந்து நடக்காததற்கு ஒழுங்கு நடவடிக்கையே எடுத்துக் கொள்ளப்பட்டிருக்க வேண்டும். இத்தகைய உத்தரவைப் பிறப்பிக்க கமிஷனருக்கு சட்ட பூர்வமான அதிகாரமில்லை. அதற்குக் கீழ்ப்படிந்து நடக்காதது சட்டபூர்வமான உத்தரவுக்குக்கீழ் படியாமல் நடந்துகொண்ட செய்கையாகாது. கமிஷனர் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளும், பிறகு நிரந்தரக் கமிட்டி எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளும் அவர்களது அதிகாரத்தை மீறிய செயல்களாகும். எனவே, 1952 நவம்பர் 5-ம் தேதியிலிருந்து மனுதார்மீது எடுத்துக்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளெல்லாவற்றையும் ரத்து செய்கிறேன். மனுதார் தமது மனுவில் ஒரே ஒரு பரிகாரத்தைத்தான் கோரியிருக்கவேண்டும். பூரா விவரங்களையும் கோர்ட்டால் ஆராய்ந்து பார்க்க முடியாது. ஆனல், பழைய உத்தரவுகளையெல்லாம் கமிஷனர் பரிசீலனை செய்து, அவற்றில் ஏதாவது சட்ட பூர்வமாக விருந்தால், தவறுகளைத் திருத்திப் பரிகாரம் செய்வாரென்று நம்புகிறேன். மேலும், கார்ப்பொரேஷன் கமிஷனர் செலவு தொகைகளையும் மனுதாருக்கு அளிக்கவேண்டும்.

13, 14-11-54 தேதிகளில் வேலூரில் நடந்த நாமக்கல் தாலூகா ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள் 2-வது மாநாட்டில் நிறைவேறிய

தீர்மானங்கள்

மாநாட்டுத் திறப்பாளர்

சென்னை மாகாண முதல் அமைச்சர்
திரு. K. காமராஜ் அவர்கள்

மாநாட்டுத் தலைவர் :

ஈரோடு நகராண்மைக் கழகத் தலைவர்
திரு. S. மீனாட்சிசுந்தரம் B. A., L. T., அவர்கள்

---

1. காலஞ்சென்ற கவிமணி **தேசிகவிநாயகம் பிள்ளை, திரு. ரபிஅகமத்கித்வாய், திரு. நாடிமுத்து பிள்ளை** முதலியவர்களுக்கு இம்மாநாடு தனது அனுதாபத்தையும் அஞ்சலியையும் செலுத்து கிறது.

2. ஆசிரியர்களுக்குப் பரிபூரண பிரஜா உரிமை வழங்கவேண்டு மென்று சென்னை அரசாங்கத்தாரை இம்மாநாடு கேட்டுக்கொள்ளு கிறது.

3. ஒரே இடங்களில் ஒரேமாதிரியான வேலைசெய்யும், ஆசிரியர்களுக்கு வித்தியாசமான சம்பள விகிதம் உள்ளது. இதை மாற்றி எந்த நிர்வாகத்தின்கீழ் வேலை செய்தாலும் மத்திய சம்பளக் கமிஷன் சிபார்சின் அடிப்படையில் சம்பளம், சம்பள உயர்வு, வீட்டு வாடகை அலவன்ஸ், வேலை நிரந்தரம், வைத்திய வசதி, லீவு வசதி மற்றுமுள்ளவை தரப்படவேண்டுமென்று இம்மாநாடு சென்னை அரசியலாரை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

4. ஆரம்ப ஆசிரியர்களுக்கும் மாகாண மேல்சபையில் தகுந்த பிரதிநிதித்துவம் அளிக்கவேணுமென்று இம்மாநாடு சென்னை அர சியலாரைக் கேட்டுக்கொள்கிறது.

5. ஆரம்பக் கல்வித் திட்டத்தை பரிசீலனை செய்ய அமைக்கப் படும் கமிட்டிகளில் ஆரம்ப ஆசிரியர்களுக்கும் தகுந்த பிரதிநிதித்து வம் அளிக்கும்படி இம்மாநாடு சென்னை அரசியலாரைக் கேட்டுக் கொள்கிறது.

6. ஆசிரியர்களைப்பற்றி அரசாங்கத்தாரால் கொண்டுவரப்பட் டிருக்கும் M. E. R. 154 ; 99 B. இவைகளில் ஏற்படுத்திய திருத்தங்

களேயும், G. O. No. 1280 முதலியவைகளே ரத்து செய்யுமாறு இம் மாநாடு சென்னை அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்கிறது.

7. ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களின் குழந்தைகளுக்குக் கல்லூரிப் படிப்பு முடிய இலவச கல்வி வசதி அளிக்கவேண்டுமென்று இம் மாநாடு சென்னை அரசாங்கத்தாரைக் கேட்டுக் கொள்ளுகிறது.

8. எல்லா மேனேஜ்மெண்டுகளின்கீழ் வேலே செய்யும் ஆசிரியர்களின் ரிட்டயரிங் வயது 60—ஆக மாற்றி அமைக்குமாறு சென்னை அரசியலாரை இம்மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

9. கல்வி இலாகா சம்பந்தப்பட்ட சகல நடவடிக்கைகளேயும் பிரதேசமொழியிலேயே நடத்த வேண்டுமென்று இம்மாநாடு சென்னை அரசியலாரைக் கேட்டுக்கொள்ளுகிறது.

10. மாகாணத்திலுள்ள எல்லா ஆரம்பப் பள்ளிகளுக்கும் ஒரே மாதிரியான புத்தகங்களேப் பிரதேச மொழியிலேயே அச்சிட்டு வழங்க வேணுமென்று சென்னை அரசாங்கத்தாரை இம்மாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.

11. ஹையர் எலிமெண்டரி கிரேடு போதனு முறைப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் S. S. L. C. பாஸ் செய்துவிட்டால் உடனடியாக செகண்டரி கிரேடு ஆசிரியர்களாக மாற்ற வேணுமாய் இம்மாநாடு சென்னை அரசியலாரைக் கேட்டுக்கொள்ளுகிறது.

12. *S. S. L. C.* பரீக்ஷை தேர்வுக் கட்டணத்தை எழுத வேண்டிய பாடத்திற்கு 3 ரூபாயாக பிரித்து வசூலிக்கும்படி சென்னை அரசியலாரை இம்மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

13. திரவியசகாய பள்ளிகளில் வேலே செய்யும் தலைமை ஆசிரியர்களுக்கு டியூடி அலவன்ஸ் கொடுக்கும்படி சென்னை அரசியலாரை இம்மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

14. பிராவிடண்டு நிதியில் ஆசிரியர்கள் கடன்வாங்கிகடன் தீர்ந்தவுடனே மறுபடியும் உடனடியாக கடன் வாங்க வசதி அளிக்குமாறு இம்மாநாடு சேலம் ஜில்லா போர்டாரைக் கேட்டுக்கொள்ளுகிறது.

15. ஆசிரியைகளுக்கு பிரசவ லீவை 3 மாதங்களாக மாற்றி அமைக்க வேண்டுமாய் இம்மாநாடு சேலம் ஜில்லா போர்டாரைக் கேட்டுக்கொள்ளுகிறது.

16. ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படும் இலவச வைத்திய வசதியை எயிடெட் பள்ளிகளில் வேலேசெய்யும் ஆசிரியர்களுக்கும் கொடுக்க வேண்டுமாய் இம்மாநாடு சென்னை அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்ளுகிறது.

17. பள்ளி கிராமத்தில் சேரிகள் இல்லாத இடங்களில் ஹரிஜன ஆசிரியர்கள் மாற்றப்பட்டால் குடியிருப்புவசதி கிடைப்பதில்லை. அப்படிப்பட்ட இடங்களில் அவர்களுக்குத் தேவையான வீட்டு வசதி செய்து கொடுக்குமாறு சேலம் ஜில்லா போர்டாரை இம்மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

18. ஹையர்கிரேடு ஆசிரியர்கள் ஒருவருட சர்வீஸ் அடைந்திருந்தால் அவர்களை S. S. L. C. தேர்வு எழுத அனுமதிக்கும்படி சென்னை அரசியலாரை இம்மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

19. S. S. L. C. பரீக்ஷையில் 4 தடவைகள் எழுதி ஆங்கிலத்தில்மட்டும் 20 மார்க்கும் மற்ற பாடங்களில் தேர்ச்சி பெற்றிருந்தால் அவர்களை செகண்டரி கிரேடு பரீக்ஷைக்கு அனுமதிக்க வேணுமாய் சென்னை அரசியலாரை இம்மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

20. எந்த மேனேஜ்மெண்டின் கீழ் வேலை செய்தாலும் மற்றொரு மானேஜ்மெண்டுக்கு மாற்றப்படும்பொழுது, அவருடைய சர்வீசை கணக்கிடப்படுவதுடன் சம்பளம் முதலிய எல்லா சலுகைகளையும் அளிக்கவேண்டுமாய் சென்னை அரசியலாரை இம்மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

21. ப்ரைவேட் பள்ளிகளில் வேலைசெய்யும் ஆசிரியர்கள் கட்ட வேண்டிய P. F. தொகையைவிட அதிக தொகை கட்டவும், அதற்கு வட்டி கொடுக்கும்படியும் உத்திரவு பிறப்பிக்க வேணுமாய் சென்னை அரசாங்கத்தாரை இம்மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

22. ஆரம்பப் பாடசாலைகளில் சாரண சாரணி பகுதிகள் வேலை செய்தால் அது சம்பந்தப்பட்ட சாதனங்கள். அதுசம்பந்தமான செலவுகள் அனைத்தையும் மானேஜ்மெண்டாரே ஏற்றுக்கொள்வதுடன் ஜில்லா சங்கத்தாரால் நடத்தப்படும் Scout புல்லடீன் இனமாக அனுப்ப வசதி செய்துகொடுக்குமாறு இம்மாநாடு ஜில்லா போர்டு, தனிப்பட்ட மானேஜ்மெண்டு நிர்வாகிகளைக் கேட்டுக் கொள்ளுகிறது.

23. 1. அகில இந்திய ரீதியில் ஆரம்பக் கல்வியைப் புதுப்பித்தல்.

2. அகில இந்திய ஆரம்ப ஆசிரியர்கள் நிலையை உயர்த்துவது.

மேலேயுள்ள தீர்மானங்களை 60-வது அகில இந்திய காங்கிரஸ் மகாசபையானது சர்க்காருக்கு சிபார்சு செய்யும்படி இம்மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

24. எயிடெட் பள்ளிகளில் வேலைசெய்யும் ஆசிரியர்களுக்கு பிரதிமாதமும் 5-ம் தேதிக்குள் சம்பளம் கிடைக்க ஏற்பாடு செய்ய வேணுமாய் இம்மாநாடு சென்னை அரசாங்கத்தாரைக் கேட்டுக் கொள்ளுகிறது.

மேல்கண்ட தீர்மானங்களின் நகல்களை சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்ப மாநாட்டு வரவேற்புக் கழகத் தலைவர், செயலாளர்களுக்கு அதிகாரமளிக்கிறது.

இங்ஙனம்,

(Sd) S. மீனாட்சிசுந்தரம் B. A., L. T.,

தலைவர்.

உதிர்ந்த முத்துக்கள்

தொகுத்தது : ஆக்கூர். S. ஜோசப்

குழந்தைகளின் வாயிலிருந்து அறிவு ஞானம் பிறக்கிறது.

—இயேசு கிறிஸ்து.

பெண்ணினத்தைக் காப்பாற்றும் சக்தியில்லா ஒரு சமூகத்துக்குத் திருமணம் செய்துகொள்ளவோ, வம்ச விருத்தி செய்யவோ யோக்கியதை கிடையாது.

மஹாத்மா காந்தி.

தைரியம் என்பது சரீரத்தின் இயல்பல்ல; அது ஆத்மாவின் இயல்பே. தைரியவானுக்கு ஆயுதங்கள் கடைசித் தேவைகளாகத் தான் இருக்கும்.

—மஹாத்மா காந்தி.

ஒரு கணத்தில் ஜாதியையும் மீறிப் போகக் கூடியவர்கள் பெண்கள் தாம்.

—தாகூர்.

மகனே திருமணத்திலே நேரங்கடத்தல் நிழலுடன் போராடுவதற்கு நிகராகும்.

—ஹெர்மஸ்.

காலத்தாலும் பொறுமையாலும் முசுக்கட்டை இலை பட்டாகி விடுகிறது.

—பாரசீகப் பழமொழி.

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

எனவே, இத்தகைய பெற்றோர்களின் பிள்ளைகள் பள்ளிக்கூடம் வரவேண்டுமானால், பள்ளிப் படிப்புக் காரணமாக அந்தப் பெற்றோர்களுக்கு எத்தகு செலவும் ஏற்படக் கூடாது. படிப்பு இலவசமாக இருக்க வேண்டும். பலகை பலப்பம் பென்சில் புத்தகம் குறிப்புச் சுவடி முதலியனவும் இலவசமாக அளிக்கப்பட வேண்டும். பகல் உணவும் இலவசமாகப் போடப்படவேண்டும். பரம ஏழைகளாக உள்ள பிள்ளைகளுக்கு இலவச உடுப்புகள் கொடுக்கவும் அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும்.

3. ஆரம்பப் பள்ளிகளில் சேரும் மாணவர்கள், இடையிலே நின்றுவிடாமல், அந்தப் பள்ளிக்கூடத்தில் உள்ள கடைசி வகுப்பு வரையில் தொடர்ந்து படிக்கும்படிச் செய்வதெப்படி ?

இறுதி வகுப்பு வரையில் படிக்காமல் இடையிலே மாணவர்கள் நின்று விடுவதற்குக் காரணம், பெற்றோர்களின் வறுமைதான். நாம் மேலே குறிப்பிட்டபடி இலவச உணவு, இலவச உடை, இலவசப் புத்தகம், இலவசக் கல்வி ஆகியவற்றை அளிக்க அரசாங்கம் முன்வந்து, ஆரம்பக் கல்வியைக் கட்டாயம் என்று சட்டமும் இயற்றிவிட்டால் இந்தக் குறை பெரும்பாலும் தீர்ந்துவிடும்.

4. ஆரம்பக் கல்விப் பாடதிட்டத்தில் இந்த மாநிலத்தின் தேவைகளுக்கும் வசதிகளுக்கும் ஏற்ப என்னென்ன மாறுதல்கள் செய்யப்படவேண்டும் ?

முன்பெல்லாம் மூன்றாவது வகுப்பு முதல் ஆங்கிலம் கட்டாய பாடமாகப் புகட்டப்பட்டு வந்தது. அன்பர் அவினாசிலிங்கனார் கல்வி அமைச்சராக இருந்தபோது இந்த முறை ஒழிக்கப்பட்டு, ஆறாவது வகுப்புமுதல் ஆங்கிலம் தொடங்கப்பட்டால் போதும் என்று ஏற்பாடு செய்யப்பட்டது. *E. S. L. C.* தேர்வுக்குச் செல்பவர்கட்கும், ஆங்கிலம் கட்டாயமில்லை என்கிற நிலை உருவாக்கப்பட்டது. பொதுவாகவே, ஆரம்பக் கல்வித் திட்டத்தில், முன்னர் இருந்த அளவு முக்யத்துவம், இப்போதெல்லாம் ஆங்கிலப் பயிற்சிக்குத் தரப்படுவதில்லை. இது தவறு. தாய்மொழிக்கு அடுத்த இடம் ஆங்கிலத்திற்கு நிச்சயம் தரப்பட்டாக வேண்டும். ஆங்கிலத்தை ஆதரிப்பது ஆங்கில ஏகாதிபத்யத்தை ஆதரிப்பதாகும் என்று ஒரு தவறான கருத்து நிலவி வருகிறது. ஆங்கிலம் வேறு. ஆங்கில ஏகாதிபத்யம் என்பது வேறு. ஆங்கில மொழியின் அவசியத்தை வற்புறுத்துவது, ஆங்கில ஏகாதிபத்யத்தை ஆதரிப்பதாக ஒரு நாளும் ஆகாது. ஆங்கிலம் இன்றைய தினம் உலகப் பொது மொழியாக விளங்குகிறது. பல திறத் தொழில்துறை அறிவு அதிலே நிரம்பிக் கிடக்

கிறது. விஞ்ஞான வளர்ச்சியின் முழு நிலையையும் ஆங்கிலத்தின் மூலமாகத்தான் நாம் காணவும் பெறவும் இயல்கிறது. நம் நாடு விரைவில் முன்னேற வேண்டுமானால் ஆங்கில அறிவு நமக்கு நிச்சயம் இருந்தாக வேண்டும். எனவே பழையபடி, மூன்றாவது வகுப்பு முதல் ஆங்கிலத்தைப் பயிற்றுவிக்க ஏற்பாடு செய்தல் இன்றியமையாதது. இதைத் தவிர வேறு எத்தகைய பெரிய மாறுதலும் ஆரம்பக் கல்விப் பாடதிட்டத்தில் இப்போது தேவையில்லை. இருக்கிற பாடதிட்டமே போதும். இந்தப் பாடதிட்டத்தையே வைத்துக் கொண்டு, எத்துணை விரைவில் எல்லாப் பிள்ளைகளையும் பள்ளிக் கூடங்களில் சேர்த்துவிட முடியுமோ, அத்துணை விரைவில் அந்தச் செயலை முடித்திடத்தான் நம்முடைய முழு முயற்சியும் பயன்பட வேண்டும். பாடதிட்டத்தை அடிக்கடி மாற்றிக்கொண்டிருப்பதால், காலமும் பணமும் முயற்சியும்தான் வீணாகுமே அல்லாமல் சிறந்த பயன் எதுவும் விளைய முடியாது.

5. ஆரம்பப் பள்ளிகளை ஆதாரப் பள்ளிகளாக மாற்றுவது பற்றி உங்கள் கருத்தென்ன ?

சுருக்கமாகச் சொல்கிறோம்: இது வீண்வேலை. ஆதாரப் பள்ளி என்பது ஓர் அர்த்தமற்ற சொல்லடுக்கு. ஆரம்பப்பள்ளிதான், உண்மையான ஆதாரப்பள்ளி. அதைத்தவிரத் தனியாக ஆதாரப் பள்ளியென ஒன்று இருக்கமுடியும் என்று சொல்வதே தவறு. ஆதாரப் பள்ளி ஆதாரப் பள்ளி என்று ஒரு சிலர் கிளிப் பிள்ளைகள்போல் பேசிவருகின்றனரே தவிர இன்னதுதான் ஆதாரக்கல்வி என்று அதன் ஆதரவாளர்கள் எவரும் இதுவரையில் விளக்கிக் கூறவில்லை. இரண்டொரு மாணவர்கள் தக்ளியைச் சுற்றுவதும், இரண்டொரு சிறுமிகள் கூடையை முடைவதும்தான் ஆதாரக் கல்வி என்றால், அத்தகைய ஆதாரக் கல்வியை உடனடியாகக் குழி தோண்டிப் புதைக்க வேண்டியது கல்வி நிபுணர்களின் தனிப் பெருங் கடமையாகும். தக்ளியைச் சுற்றுவதாலும் கூடையை முடைவதாலும் பாய்கள் நெய்வதாலும் பானைகள் செய்வதாலும் இந்த நாட்டின் வேலையில்லாத் திண்டாட்டம் தீர்ந்துவிடும் என்று யாராவது கூறினால் அவர்களுக்கு உலக அறிவு போதாது என்றுதான் நாம் கூறமுடியும். இந்தத் தொழில்களைப் பரம்பரை பரம்பரையாகச் செய்து வருபவர்களே, செய்த பண்டங்களை வாங்குவாரின்றித் தவிக்கிறார்கள். கைத்தறி நெசவாளர்களின் துயரம் நாடறிந்த ஒன்று. இந்த நிலையில் மேலும் பல்லாயிரம் இளைஞர்களை, ஆதாரக் கல்வி என்கிற பெயரால், இத்தகு தொழில்களுக்குத் தூரத்தும் பணியை, கல்வி என்று கூறுவதைவிட கொடுமை என்று சொல்வதே பொருந்தும். நாட்டிலே உள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தை

உண்மையாகவே போக்க வேண்டுமானால், அதற்குள்ள ஒரே வழி, உலகத்தில் புதிது புதிதாக வளர்ந்து வருகின்ற பல்லாயிரக் கணக்கான நவீனகால தொழில்களை, திட்டம் தீட்டி, இங்கும் தீவிரமான அளவில் தொடங்குவதைத் தவிர வேறு வழி இல்லை. அப்படிப் பட்ட தொழில்களிலும் ஆரம்பப் பள்ளி மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கவேண்டிய அவசியம் துளியும் இல்லை. உயர் நிலைப் பள்ளிகளில் தான் அந்தப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும். உயர்நிலைப் பள்ளிகளை இருவகையாகப் பிரித்து, ஒருவகையைக் கலைக் கல்விப் பள்ளிகளாகவும்; மற்றொரு வகையைத் தொழிற் கல்விப் பள்ளிகளாகவும் மாற்ற வேண்டும். அவ்வாறு அமைக்கப்படுகிற தொழிற் கல்விப் பள்ளிகளில், அழிந்து கொண்டிருக்கும் பழங்காலத் தொழில்கள் இரண்டொன்றையே திருப்பித் திருப்பிச் சொல்லித் தராமல் வேக வேகமாக வளர்ந்துவரும் நவீனகாலத் தொழில்கள் பற்பலவற்றைப் பயிற்றுவிக்கவேண்டும். உயர் நிலைப் பள்ளிகளிலே தொழிற் பிரிவுக்கு இந்த ஏற்பாடு. ஆரம்பப் பள்ளிகளைப் பொறுத்த வரை, தொழிற் கல்வி என்கிற பேச்சுக்கே இடம் இருத்தலாகாது. எண்ணையும் எழுத்தையும் கண்ணெனக் கற்பிப்பதற்கே இந்தப் பள்ளிகள் பயன்படவேண்டும். சின்னஞ் சிறு குழந்தைகளைக் கடினமான தொழில்களில் போட்டு வாட்டி, அப்படி வாட்டுவதற்குப் பெயர்தான் ஆதாரக் கல்வி என்று சொன்னால், அத்தகு கல்வியை எதிர்த்துப் போராட ஒரு நாளும் நாம் தயங்கமாட்டோம்.

6. உயர்நிலைப் பள்ளிகளுக்கும் ஆரம்பப் பள்ளிகளுக்குமிடையே எத்தகைய தொடர்பு இருக்க வேண்டும்?

செகண்டரி பள்ளி, நடுத்தரப் பள்ளி, உயர்தர ஆரம்பப் பள்ளி என்றெல்லாம் உள்ள சொற்றொடர்கள் கைவிடப்பட வேண்டும். நாட்டிலே இரண்டே வகைப் பள்ளிகள் இருத்தல் வேண்டும். ஒன்று ஆரம்பப் பள்ளி, இங்கே ஒன்று முதல் எட்டாவது வரை உள்ள வகுப்புக்கள் இடம் பெற வேண்டும். இரண்டாவது, உயர் நிலைப் பள்ளி. இங்கே ஒன்பது, பத்து, S. S. L. C. ஆகிய மூன்று வகுப்புகளும் இடம் பெறவேண்டும். எந்த ஆரம்பப் பள்ளியாக இருந்தாலும் சரி, அதன் எட்டாவது வகுப்பில் தேர்ச்சிபெற்ற மாணவர்கள், அந்தப் பள்ளிக்கூடத்தின் தேர்ச்சி இதழைக் காட்டிய அளவில், எந்த உயர் நிலைப் பள்ளியாக இருந்தாலும் சரி, அதன் ஒன்பதாவது வகுப்பில் சேர்க்கப்பட வேண்டும். எந்த உயர்நிலைப் பள்ளியிலும் ஒன்பதாவதிலிருந்துதான் வகுப்புகள் இருக்கவேண்டுமே தவிர ஒன்றுமுதல் எட்டாவது வரை உள்ள வகுப்புகள் இருக்கக்கூடாது. ஏதாவது ஒரு மானேஜ்மெண்டார், ஒன்று முதல் S. S. L. C. வரை உள்ள பதினொரு வகுப்புகளையும் நடத்த விரும்பினால், அவர்கள் ஆரம்பப் பள்ளி என ஒன்றும், உயர்நிலைப்

பள்ளி என ஒன்றும், ஆக இரண்டு தனித்தனி பள்ளிக்கூடங்களை நடத்த வேண்டும்.

7. ஆரம்ப ஆசிரியர்களின் ஊதியத்தைப்பற்றி உங்கள் கருத்தென்ன?

இப்போது உள்ள ஊதியம் மிக மிகக் குறைவு. ஹையர் கிரேடு ஆசிரியர்களுக்கும் சரி, செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்கும் சரி, இப்போது உள்ள மாத ஊதியத்தோடு, **குறைந்தது இருபது ரூபாயாவது**, கூட்டித் தரப்படவேண்டும். ஆரம்ப ஆசிரியர்களின் ஊதியம் உயர்த்தப் படாதவரையில், ஆரம்பக் கல்வித் திட்டத்தில் ஆயிரம் மாறுதல்களைச் செய்தாலும் சரி, முன்னேற்றம் சிறிதளவும் ஏற்படாது.

வெளிவந்துவிட்டது! **வாங்கிவிட்டீர்களா?**

திராவிடர் டைரி 1955

கண்ணுக்கும் கருத்துக்கும் இன்பமூட்டும் எழிலேடு

★ **இளைஞர்தம் கரத்திலெல்லாம இருக்கவேண்டிய புத்தகம்**

★ பெர்னட்ஷா, ஷெல்லி, காண்டேகர், காந்தியடிகள், அண்ணாதுரை, திரு. வி. க போன்ற பேரறிஞர்களின் பொன்மொழிகள் 365.

★ நாடெங்கும் பரவியுள்ள திராவிட முன்னேற்றக் கழகக் கிளைகள் 1200 ன் முழுவிவரங்கள், கழகச் சட்டதிட்டங்கள்.

★ புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் திராவிட நாட்டுப் பண் என்னும் தேனினும் இனிய கீதம்.

★ தபால் செய்திகள், வருமான வரி பத்திரப் பதிவு விவரங்கள்.

★ தி. மு. க பேச்சாளர்களின் முழு விவரம், முகவரி.

முதலான பல்வேறு பகுதிகள் அமைந்தது. பயனும் சுவையும் மிகுந்தது. டைரிக்கு டைரியாகவும், கருத்துக் களஞ்சியத்துக்குக் களஞ்சியமாகவும் விளங்குவது.

480 பக்கங்கள். விலை ரூ. 1-0-0 தனிப் பிரதி வேண்டுவோர் ரூ. 1-3-0 அனுப்புக.

வணிகர்கட்குக் கழிவு 20%. தபால் செலவு தனி.

போர்வாள் அலுவலகம்

பவழக்காரத் தெரு, சென்னை—1.

புத்தகப் பூங்கா

தையற்கலை [பெண்கள் உடை]:—

[ஆசிரியர்: கே. பி. சுந்தரம் ஜி. சி. டி. விலை:— ரூ. 2–0–0 பதிப்பாளர்: பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை—1.]

உண்ணும் உணவும், உடுக்கும் உடையும், இருக்கும் இடமும் மனிதனின் அடிப்படைத் தேவைகள். இவற்றுள், வாழ்வதற்கு வீடில்லாமல் சில காலம் இருக்க முடியும். உண்பதற்கு உணவில்லாமல்கூட இரண்டொரு நாள் இருக்கமுடியும். ஆனால்உடுப்பதற்குரிய உடையில்லாமல் ஒரு நாள்கூட இந்த நாகரிக உலகில் உலவுவது இயலாது. ஆடை இல்லாதவன் அரை மனிதன் என்னும் பழமொழி இந்தக் கருத்தைத்தானே எழில்பட விளக்குகிறது! நாகரிக உலகத்திற்கு இன்றியமையாத உடுப்புகளைத் தைக்கும் முறை ஒரு தொழிலாக மட்டும் இல்லாமல் இந்நாளில் தலை சிறந்த ஒரு கலையாகவும் வளர்ச்சி பெற்று வருகிறது. அத்தகு பீடும் பெருமையும் வாய்ந்த தையற்கலையின் நுணுக்கங்களை அழகுபட இயம்பும் நூல்கள் ஆங்கிலத்தில் ஏராளமாக உள்ளன. ஆனால் தமிழில் இதுவரை இல்லாமல் இருந்தது. அந்தக் குறையைப் போக்கிடும் வகையில் இந்தச் சிறந்த ஏடு இதுபோது வெளிவந்திருக்கிறது. பாடி, ஜம்பர், சோலி, பஞ்சாபி ப்ளவுஸ், கட்டோரி ப்ளவுஸ், யோக் ப்ளவுஸ், பெட்டிகோட், பாவாடை, கவுன் முதலான பெண்களின் உடுப்புகள் பலவற்றையும் தைக்கும் முறை, அளவெடுக்கும் வகை, தொழில் நுணுக்கங்கள் யாவும், இந்தப் புத்தகத்தில், தெளிவாகவும் எளிதாகவும் இனிமையாகவும் விளக்கப்பட்டிருக்கின்றன: தையற்கலையைத் தொடக்கத்திலிருந்து முறையாகக் கற்றுக்கொள்ள விரும்புபவர்க்கு இந்த ஏடு பேருதவிபுரியும். தையற்கலைப் பயிற்சிப் பள்ளிகளில் பாடபுத்தகமாக இருப்பதற்கும் முழுத் தகுதி படைத்த நூல். இந்தப் புத்தகத்திற்கு அருமையானதோர் அணிந்துரை அளித்துள்ள அறிஞர் அண்ணாதுரை குறிப்பிடுவதுபோல, “நண்பர் கே. பி. சுந்தரம் அவர்களின் இந்த முயற்சியைத் தமிழகம் போற்றி வரவேற்கும் என்பதில் ஐயமில்லை.” பல்வேறு வகை உடுப்புகளைப் பொருத்தமும் எழிலும் ததும்பிடும் வகையில் தைத்துத் தருவதில் தனிப் புலமை படைத்தவர் நண்பர் சுந்தரம். அந்தத் திறமையும் தெளிவும், இந்தப் புத்தகம் முழுவதிலும், தம் கைவண்ணத்தைக் காட்டியிருக்கின்றன. அழகான ஏடு—அருமையான முயற்சி.

Edited, Printed and Published by P. Veeraraghavan at the 'Venkatesan Press' 94/95 New St. Mannady, Madras-1.